Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
பல் கட்டுவதற்கும்,
பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-1476)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 09 (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 338

# பொ.ஐ.முவுடன் கூட்டணி அமைக்கும் பேச்சு முறிவடைந்துவிட்டதாக ஜே.வி.பி. அறிவிப்பு!

## தமது பலத்தை குறைவாக மதிப்பிடுவதாகவும் குற்றச்சாட்டு!

(கொழும்பு)

**சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்காக, கடந்த ஏழு மாதங்களாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கை எட்டப்படாமலேயே நேற்றுமுன்தினம் முறிவடைந்துவிட்டதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.**

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றிய நடவடிக்கைகள் தொடர்பாக, இரண்டு கட்சிகளும் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருப்பதே பேச்சுவார்த்தை முறிவடைந்ததற்கு பிரதான காரணமென்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அதிகாரப் பகிர்வே, இனப் பிரச்சினைக்கான தீர்வாக அமையும் என்பது சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாகும் எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி.,

பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை, விடுதலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)



வீண்ணாணம் வீநாசியர்

ஏழு மாதப் பேச்சு புஷ்வானமாப் போச்சுப் பாரப்பா...!

## வீதி விபத்தில் அதிபர் உயிரிழப்பு!

கல்வியங்காடு பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவமொன்றில் புத்தூர் மெதடிஸ்த மிஷன் பாடசாலை அதிபர் உயிரிழந்தார்.

நேற்றுமாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான செல்லையா யோகேஸ்வரன் (வயது 52) என்பவரே உயிரிழந்தார்.

யாழ்.நகரிலிருந்து கல்வியங்காட்டிலுள்ள தனது வீட்டுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாய்த்தகராறு கத்திக் குத்தில் முடிந்தது

வாய்த்தகராறு கத்திக்குத்தில் முடிந்த சம்பவம் ஒன்று யாழ். புளியடிப் பகுதியில் இடம்பெற்றது.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, தவறணை ஒன்றில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு கைகலப்பில் முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தாலும் தேர்தலில் இணைந்து போட்டியிடுவோம்!

## அனுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் கூட்டணியை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்ற போதிலும், அடுத்து வரும் பொதுத்தேர்தலில் இரண்டு கட்சிகளும் இணைந்தே போட்டியிடும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாக்க தெரிவித்தார்.

எவ்வாறான கருத்து வேறுபாடுகள் இருக்கின்ற போதிலும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைத் தோல்வியுறச் செய்வதற்காக, மக்கள் விடுதலை முன்னணியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

## க.பொ.த சாதாரணதர பரீட்சை டிசம்பர் முதலாம் திகதி!

(கொழும்பு)

க.பொ.த சாதாரணதரப் பரீட்சை டிசம்பர் 1 ஆம் திகதி ஆரம்பமாகுமென பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைகள் டிசெம்பர் முதலாம் திகதி தொடங்கி, 12 ஆம் திகதி முடிவடையுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. செயலாளர் கோபி அனான் அடுத்த மாதம் கொழும்பு வருகிறார்!

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் விரைவில் இலங்கை வரவுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைவரும் கோபி அனான், இலங்கையில் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அநேகமாக இந்த விஜயம் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதியளவில் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னரும் கோபிஅனான் இலங்கைக்கு வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டபோதும், இறுதியில் அந்த விஜயம் ரத்துச்செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (01)

## பண்டாரவளை பஸ் விபத்தில் 7 பேர் உயிரிழப்பு!

பதுளையிலிருந்து பண்டாரவளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் விபத்துக்குள்ளாகி இருநூறு மீற்றர் பள்ளமொன்றினுள் வீழ்ந்ததில், 7 பேர் உயிரிழந்ததுடன் 40 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பண்டாரவளை ரணல்லவில் எல்ல - வெள்ளவாய வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காய மடைந்த 40 இற்கு மேற்பட்ட பயணிகள் பண்டாரவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# இனந்தெரியாதோரின் சூட்டுக்கு இருவர் பலி!

## வெள்ளவத்தை பகுதியில் சம்பவம்

வெள்ளவத்தைப் பகுதியில், வெள்ளைக் காரில் வந்த இருவரை இனந்தெரியாத இரண்டு பேர் சுட்டுக்கொன்றுவிட்டு, பிக்அப் வாகனத்தில் தப்பிச்சென்றுள்ள சம்பவம் ஒன்று நேற்றுப் பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

இந்தக் கொலைகளுக்குப் பாதாள உலகக் கோஷ்டிதான் காரணமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட இருவர் வந்த காரில் மாணிக்கக்கற்களும், பணமும் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போர் ஏற்படாமல் தடுப்பதற்கு நோர்வே அரசு உதவவேண்டும்!

## ஹெல்கிசனிடம் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

இலங்கையில் மீண்டும் போர் ஏற்படாமல் இருப்பதற்கு, நோர்வே அரசு முழுமையான பங்களிப்பு வழங்கவேண்டுமென, மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயில், அந்நாட்டு பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனைச் சந்தித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காணி அதிகாரம், அதியுயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படுதல், உள்ளகப் பாதுகாப்பு அதிகாரம் ஆகியன பற்றிய தெளிவான நிலைப்பாடு அறிந்தால் மட்டுமே, இடைக்கால நிர்வாக அலகு சாத்தியமாகும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இச்சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட விதார் ஹெல்கிசன், சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்பியடிக்கும் இனவாத அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கெதிராக பரந்த அளவில் மாற்றுப் பிரசாரத்தை மேற்கொள்ளும் அவசியத்தைத் தாம் புரிந்துகொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திப்பு!

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது - கிழக்கு மாகாணத்தில் பொலிஸாருக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனம் தொடர்பாக விரிவாக ஆராயவுள்ளதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள்தெரிவித்தன்.

இந்தச் சந்திப்பில் - உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மற்றும் பாதுகாப்பு படை அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (01)

## தமிழ்நாட்டிலுள்ள இலங்கை மீனவர் இன்று திருமலைக்கு!

தமிழ்நாடு, நாகபட்டினத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 53 இலங்கை மீனவர்களும், 61 மீன்பிடிப்படகுகளும் திருகோணமலைக்கு இன்று அனுப்பிவைக்கப்படவுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

## சிறு விளம்பரம்

**மணமகள் தேவை**

அரசினர் வைத்தியசாலையில் டாக்டராக வேலை செய்யும் 32 வயது நிரம்பிய உயர்குலம் இடதுகால் பலவீனமுற்றவருக்கு 25-31வயதிற்கு இடைப்பட்ட பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். குடும்ப விபரத்துடனும், சாதகக் குறிப்புடனும் தொடர்பு கொள்ளவும்.

**விளம்பர இல.17 மே/பா நமது ஈழநாடு, யாழ்ப்பாணம்.** (470)

## தேவை

**எமது சோப் விற்பனை வாகனத்திற்கு சாரதி தேவை.**

**மில்க்வைற் தொழிலகம் 525/2 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.** (சி-1475)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், மனிஷா நடித்த

# முதல்வன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

# LONG KISS GOODNIGHT

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1425)

## ராஜா யாழ்ப்பாணம்.

மாதவன், சிம்ரன், சினேகா நடித்த

# பார்த்தாலே பரவசம்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1424)

## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

## லொறி இல.42/3568 திருத்தத்திற்கான கேள்வி விண்ணப்பம்

எமது சங்க லொறிக்கு, பின்வரும் திருத்த வேலைகள் செய்வதற்கான கேள்வி விண்ணப்பங்கள் எமது சங்கத்தால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் எதிர்வரும் 20.09.2003 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் *"பொது முகாமையாளர் வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி"* என்ற முகவரிக்கு அனுப்பிவைப்பதுடன், விண்ணப்ப உறையின் இடதுபக்க மேல் மூலையில் *"லொறி திருத்தத்திற்கான கேள்வி விண்ணப்பம்"* எனக் குறிப்பிட்டு, நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். லொறியைப் பார்வையிட விரும்புவோர் - கந்தோர் கடமை நேரங்களில் பார்வையிடலாம்.

### திருத்த வேலை விபரம்

1. *எஞ்சின் வேலை*
2. *ரிங்கர் வேலை*
3. *வயரிங் வேலை*
4. *உடற்கோப்பு மாற்றியமைத்தல்*

**நீர்வேலி.**
**2003.09.06** சி/1472 **பதில் பொது முகாமையாளர்.**

# Jaffna College Institute of Technology

## VADDUKODDAI, JAFFNA, SRI LANKA

Suitable Candidates are Welcome to register for the following courses

***Get Open University exemptions with our Diplomas***

All courses well suited for school leavers

**Diploma courses**
Diploma in Computer programming & Data Processing
Duration: 1 Year (Full time)

**Technician Diploma courses (NDT Level courses)**
Electronics & Telecommunication Engineering
Duration: 3 Years (Full time)

**Technician Certificate courses**
- Basic Engineering
- Electronics

Duration: 1 Year (Full time)

Certificate Craft courses (தமிழ்மொழி மூலம்)

- **Mechanical Craftsman Practice** (லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சி)
- **Electrical Wiring & Installation Practice** (மின் இணைப்பும் நிர்மாணமும்)
- **Automobile Technology** (மோட்டார் வாகன தொழில்நுட்பம்)
- **Radio & T.V Servicing** (றேடியோ ரீவி பழுதுபார்த்தல்)
- **Foundry Practice** (உலோக வார்ப்பு தொழிற்பயிற்சி)
- **Air. Conditioning & Refrigeration** (குளிரூட்டுதல் பயிற்சி)

Duration: 1 Year (Full time)

FACILITIES LIBRARY, HOSTEL, SPORTS

Application forms are available at
JCIT, Vaddukoddai and Undergraduate Department, Jaffna College
(Hospital Road, Jaffna.

**DIRECTOR**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**

Email:Jcit@sltnet.lk Tel.No : 070-213139

# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ்.மாவட்டம்

## செப்ரெம்பர் 01 - 07 வரை

### மிதிவெடி, மற்றும் வெடிக்காத வெடிபொருட்களினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு

- உடல் அங்கங்களை ஊனமாக்கக் கூடிய விபத்துக்கள் மறக்க முடியாத மனப்பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்ற ஓர் அனுபவமாக அனைவருக்கும் மாறிவிடுகின்றது. இப்படிப்பட்ட விபத்துக்களின் விளைவாக பழைய தொழிலை தொடர முடியாத நிலை, கல்விகற்கும் சிறுவர்களாயின் கல்வியை தொடர்வதில் உள்ள பிரச்சினைகள், போக்குவரத்தில் உள்ள பிரச்சினைகள், பாரபட்சமாக நடாத்தப்படும் நிலை, மருத்துவ, ஏனைய செலவீனங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளும், தடைகளும் உருவாகின்றன. வாழ்க்கையானது சவால்கள் நிறைந்ததாக மாறிவிடுகின்றது.
- இப்படிப்பட்ட, வாழ்க்கையையே மாற்றி அமைக்கக் கூடிய விபத்துக்களால் ஏற்பட்ட பாதிப்புக்கள், விளைவுகள் பற்றி பாதிக்கப்பட்டவர்களும், அவர்களது குடும்பங்களும் கவலைப் பட்டுக்கொண்டு இருக்கலாம். ஆனால் அண்மைக்காலமாக யாழ்குடாநாட்டில்இவ்வகையான பாதிப்புக்குள்ளானோரின் புனர்வாழ்வு தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அரசாங்கமும் பல உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் உடல் ஊனமுற்றோருக்கான அதிலும் குறிப்பாக மிதிவெடி, வெடிபொருட்களினால் பாதிப்புற்றோருக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த வகையில் மிதிவெடிப் பாதிப்பக்குட்பட்ட ஒரு நபர் அல்லது அவரது குடும்பம்

1. உடல் ரீதியான இழப்புக்களுக்கான மருத்துவ ஏனைய உதவிகளையும்
2. உளரீதியான தாக்கங்களுக்கு தேவையான ஆலோசனைகளையும்
3. பொருளாதார ரீதியான இழப்புக்களை ஈடுசெய்ய கடன் அடிப்படையில் நிதி உதவிகளையும்

இந்தப் புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

- மிதிவெடி மற்றும் வெடிக்காத பொருட்களினால் அங்க அல்லது வேறு உடல் ரீதியான இழப்புக்களுக்கு உட்பட்டவர்கள் உடற்பயிற்சி, செயற்கை கால் பொருத்துதல், சக்கர நாற்காலி, கவையுள்ள கெம்பு (Cru tches) போன்ற சேவைகள், உதவிகளை ஜெய்ப்பூர் செயற்கை கால் தொழிலகம் (Jaipur foot) ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கம் (AROD) குடும்ப புனர்வாழ்வு நிலையம் நிலையம் (FRC) ஆகிய நிறுவனங்களை அணுகுவதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியம்.
- உளரீதியான தாக்கங்களுக்கான ஆலோசனை சேவைகளை சாந்திகம் (Shanthiham) ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம் (AROD) குடும்ப புனர்வாழ்வு நிலையம் (FRC) ஜெய்ப்பூர் செயற்கை கால் தொழிலகம் போன்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. மேலும் சுய தொழில் வாய்ப்புக்கான கடன் உதவிகளை சர்வோதயம் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) ஜெயப்பூர் செயற்கை கால் தொழிலகம் ஆகிய நிறுவனங்களை அணுகுவதன் மூலம் பெற்று பயனடைய முடியும். இவை தவிர பாடசாலை செல்லும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தை சேர்ந்த பாடசாலை செல்லும் சிறுவர்கள் ஆகியோருக்கான கல்வி தொடர்பான நிதி உதவிகளை ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) சர்வவோதயம், ஜெயப்பூர் செயற்கை கால் தொழிலகம் (Jaipur Foot) போன்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.
- மிதிவெடி மற்றும் வெடிபொருட்களின்னால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள், ஒரு நபர் அல்லது அவரது குடும்பம் விபத்தை சந்தித்ததில் இருந்து அந்த நபரை அல்லது அவரது குடும்பத்தை மீண்டும் சமூகத்தில் பழைய நிலைக்கு கொண்டு வரும் வரையான சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும். இப்புனர்வாழ்வு நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்ள உதவி வழங்கும் நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் ஆதரவும் மட்டுமன்றி பாதிப்புக்குள்ளானவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிக மிக அவசியமாகின்றது.

## ஆபத்து நிறைந்த பூமியில் அவதானமாக நடப்போம்

## மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் - யாழ்ப்பாணம்

(சி.1421)

## நாடும் நடப்பும்




செய்தி - ஜே.வி.பியின் பின்னாலிருந்து பொ.ஐ.மு.செயற்படுகிறது.

# குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் யாராக இருப்பினும், அரசியல் பேதம் பாராது அவர்களை கைதுசெய்து- சட்டத்தின் முன் நிறுத்தும்படி உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, தனக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக வடமேல் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் அசோக ரத்னவீர தெரிவித்தார்.

அத்துடன், முன்னைய ஆட்சிக் காலத்தில் புத்தளம் மாவட்டத்தில் பொ.ஐ.மு. ஆதரவாளர்களுக்கு சட்ட விரோதமான முறையில் துப்பாக்கிகள் வழங்கப்பட்ட தாகவும், இதுவரை அவை மீளப் பெறப்படவில்லையென வும் - புத்தளம் மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பி னர் பாலிதரங்க பண்டார தெரிவித்துள்ள குற்றச்சாட்டு குறித்தும் உரிய விசாரணைக்களை மேற்கொள்ள நடவ டிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

புத்தளம் மாவட்டத்தில், குறிப்பாக புத்தளம் பிரதே சத்தில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்தி, பிரதேசத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கு பொலிஸாருக்கு அரசியல்வாதிகள் எவ் வாறு பங்களிப்பு செய்யமுடியும் என்பது குறித்து, கலந் துரையாடல் வியாழக்கிழமை புத்தளம் வாடி வீட்டில் இடம்பெற்ற போதே - அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸார் தமது கடமைகளைச் சரியாக நிறைவேற்ற அரசியல்வாதிகள் குறுக்கீடு செய்வதைத் தவிர்க்க வேண்டும். முன்னைய ஆட்சிக் காலத்தில் புத்தளம் மாவட்டத்தில் பொ. ஐ.மு. ஆதரவாளர்க ளுக்கு சட்டவிரோத மாக துப்பாக்கிகள் வழங்கப்பட்டு, பின்னர் அவைகள் மீளப் பெறப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக் குறித்த துரித விசா ரணை நடத்தப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



எனவே கடந்த காலங்கள் போலல்லாது, இனிவரும் காலங்களில் பிரதேசத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதை அரசியல்வாதிகள் முற்றாகத் தவிர்த்து, குற்றச்செயல் களை ஒழிப்பதற்கு - பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றார். இந்தக் கலந்துரையாடலில் பாலிதரங்க பண்டார, மாகாண அமைச்சர் நவவி, மு.கா. தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் ஆகியோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

# 'உலைக்களம்' நூல் அறிமுக விழா மன்னாரில் நடைபெற்றது!

கவிஞர் புதுவை இரத்தினதுரையின், (வியாசன்) உலைக்களம் கவிதைத் தொகுதி அறிமுகவிழா, நேற்றுமுன்தினம் மாலை மன்னார் நகரமண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவடட் அரசியல் துறைப் பொறுப்பாளர் அமிர்தாப் தலைமை யில் நடந்த இந்த நிகழ்வில், மாவீரர் லெப்.கேணல் விக்ரரின் தந்தை மருசலீன் பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை அமிர்தாப் ஏற்றினார்.

தொடர்ந்து நடந்த மண்டப நிகழ்வில் - வரவேற்புரையினை மன்னார் மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவரசி ஆற்றினார்.

தலைமை உரையைத் தொடர்ந்து வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் சிறப்புரையாற்றினார். அறிமுக உரையினை குழந் தை ஆற்றியதைத் தொடர்ந்து, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நூலினை வெளியிட்டுவைக்க, சிறப்புப் பிரதி யினை மன்னார் மாவட்ட அரச அதிபர் விசுவலிங்கம் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து நூலின் மதிப்பீட்டுரையினை - ஆசிரியர் செபஸ்ரியன் ஆற் றினார். நூலின் ஆசிரியரான புதுவை இரத்தினதுரை தனது பதிலுரையினை ஆற்றியதை தொடர்ந்து, மன்னார் மாவட்ட அரசியறதுறை துணைப் பொறுப் பாளர் மூர்த்தி நன்றியுரையை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் - மன்னார் மக்கள் சார்பில் நூலின் அளவில் தங்க விருது ஒன்று, நூல் ஆசிரியருக்கு ஜேக்கப் என்பவரால் வழங்கிக் கௌர விக்கப்பட்டது.

# நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காக புதிய திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்!

## மக்கள் விடுதலை முன்னணி

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்றுவரும் நெருக் கடிகளை எதிர்நோக்கும் வகையில்- அரசியல் கட்சிகளுடனும், பிற அமைப்புக்களுடன் கலந்து பேசி- ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்ப டுத்துவதற்கு ஜே.வி.பி முன் வந் துள்ளது.

இன்னும் சில வாரங்களில், இந்த திட்டத்தை மேம்படுத்தும் நோக்கமாக, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப் பினர்களான - விமல் வீரவன்ச, நந் தன குணதிலக, அனுரா திஸநா யக்க தலைமையில் குழுவென்று நியமிக்கப்படவுள்ளது.

இந்தக் குழு - மதத் தலைவர்க ளையும், புத்திஜீவிகளையும் மற் றும் அரசியல் கட்சித் தலைவர்கள், பிற அமைப்புக்களின் முக்கியஸ்தர் களைச் சந்திக்கவுள்ளது.

விடுதலைப் புலிகளிடமிருந்து, நாட்டைக் காப்பாற்ற - இந்த புதிய திட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

# பத்திரிகையாளர் ஓய்வூதிய சட்ட நகல் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க யோசனை

(கொழும்பு)

பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூ தியம் வழங்கும் சட்டநகல் மூல மொன்றை, நாடாளுமன்றத்தில் சமர் ப்பிப்பதற்கு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக் கார் தீர்மானித்துள்ளார்.

அடுத்த வரவுசெலவுத் திட்டத் துக்கு முன்பு, இதற்கான அனும தியை அமைச்சரவையில் பெற்றுக் கொள்வதென்றும், அவர் தீர்மானித் துள்ளார்.

சட்டவரைஞர் திணைக்களம், இறுதியாகத் தயாரித்த சட்ட மூலத் தை - இந்த மாத இறுதியில் நடைபெ றும் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவில் சமர்ப்பிக்க, அமைச்சர் இம் தியாஸ் பாக்கீர் மாக்கார் முடிவெ டுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படு கிறது.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில், தயாரிக்கப்படும் இந்த சட்ட மூலத் தின் மூலம், 65 வயதைப் பூர்த்திய டைந்த உழைக்கும் பத்திரிகையா ளர்களுக்கு, ஓய்வூதியமாக 10 ஆயி ரம் ரூபா வழங்கப்பட இருக்கிறது.

# மத மாற்றத் தடைச்சட்டத்திற்கு சிஹல உறுமய கட்சி ஆதரவு!

மதமாற்றத்துக்கான தடைச்சட்டத்தினை அமுல்படுத்துவதற்கு, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் எடுத்துவரும் நடவடிக்கைக்கு - சிஹல உறுமயக் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

மதமாற்ற தடை சட்டத்தினை, நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அமைச் சர் மகேஸ்வரன் எடுத்துவரும் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகை யில் - அமைச்சரை, சிஹல உறுமய கட்சியினர் இன்னும் சில தினங்களில் அமைச்சில் சந்தித்துப் பேசவிருப்பம் தெரிவித்துள்ளனர்.

மதமாற்றச் சட்டத்தினை அமுல்படுத்தும் பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, நிறைவேற் றுவது தொடர்பில் சட்ட மா அதிபருடன் ஆலோசனை நடத்தப்படவுள்ளது. இன்னும் சிலதினங்களில் சட்டமா அதிபருடன் கலந்துரையாடல் நடத்தப் படவுள்ளதாக, அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

# பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பல்கலைக்கழகத்தில் உள்வாரியாக கற்கத்தடை!

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாண பாட சாலைகளில் கற்பித்துக் கொண்டு, பல்கமைக்கழகங்களிலும் உள்வாரி மாணவர்களாக கல்வி கற்கும் ஆசி ரியர்கள் மீதும், அவர்களுக்கு துணை புரியும் அதிபர்கள் மீதும் கடுமை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட வுள்ளதாக, வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள் ளார்.

ஆசிரியர் ஒருவர், தகுதிகாண் காலம் முடிவதற்கு முன்பு - முறையா கக் கற்கை விடுமுறையைப் பெறா மல், பாடசாலையில் கற்பித்துக் கொண்டு - பல்கலைக்கழகத்தில் அல்லது கல்வியியல் கல்லூரியில் உள்வாரி மாணவராக கற்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த விடயத்தில் தொடர்ந்தும் - ஆசிரியர்களும், அதி பர்களும் கவனயீனமாக நடந்துகொள வது பற்றி, மாகாண கல்வி அமைச் சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

முழுநேர சேவையில் ஈடுபட வேண டிய ஆசிரியர்கள், பல்கலைக்கழகங் களில் உள்வாரி மாணவராகப் பாட நெறிகளைப் பின்பற்றுவதன் மூலம், தம்மிடம் கல்விகற்கும் மாணவர்க ளுக்கு ஆற்றவேண்டிய கடமைகளைச செய்வதற்கு தடை ஏற்படுகிறது.

இது முற்றிலும் சட்டத்திற்கும், இறைமைக்கும் விரோதமான செயல் என்று, கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வாறான ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுககாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவர்களை பதவியிலிருந்து நீக்க வேண்டியேற்படும் எனத் தெரிவித்தார்.

### சைவப்புலவர் தேர்வு இலவச வகுப்பு

அகில இலங்கைச் சைவப்புல வர் தேர்வுக்கான இலவச வகுப்பு, எதிர்வரும் 14 ஆம் திகதி வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது. வகுப்பில் சேர்ந்து கற்க விரும்புவோர், காலை 10 மணிக்கு வருகைதந்து, பெயர் களை பதிவுசெய்யுமாறு, சங்கச் செய லாளர் அறிவித்துள்ளர்.

### முழுநிலா கருத்தரங்கு

அகவொளி நிலையத்தால் நடாத் தும் முழுநிலா கருத்தரங்கு, எதிர் வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு, சென்.பற்றிக்ஸ் வீதியிலுள்ள 'அகவொளி' நிலையத் தில் நடைபெறவுள்ளது. இதில் சிறு வர் 'துஷ்பிரயோகமும், பாதிக்கப்பட்ட சிறுவர்களை கையாளுதல்' என்ற தலைப்பில் 'வைத்திய கலாநிதி ஆர். சுரேந்திரகுமார் உரையாற்றவுள்ளார்.

# வடக்கு-கிழக்கு மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் ஆரம்பம்!

வடக்கு - கிழக்கு மாகாணப் பாட சாலைகளில் மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டமொன்றை, உலக உணவுத்திட்டம் ஆரம்பித்துள்ளது.

இதன் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 33 ஆயி ரம் மாணவர்கள் சோற்றுடன், பருப்பு, சோயா மற்றும் மரக்கறி வகைகளை மதிய உணவாகப் பெறுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் வசமுள்ள பகுதிகளில் மூன்றில் ஒரு பங்கு சிறார் கள் காலை உணவு இன்றியே பள் ளிக்குச் செல்கிறார்கள். படிக்க முடி யாத அளவுக்குப் பசி என்று, அங்கு மூன்று ஆய்வு நடத்திய ஜேர்மன் உதவி நிறுவனம் கூறியுள்ளது. இதன் பிரகாரமே, வடக்கு - கிழக்கில் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உலக உணவுத் திட்டம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# சிலாபம் பொலிஸ் அத்தியட்சகர் இடமாற்றம் கோரி விண்ணப்பம்

சிலாபம் பொலிஸ் நிலைய அத் தியட்சகர், அரசியல் அழுத்தம் கார ணமாக - இடமாற்றம் கோரி விண் ணப்பம் செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர் ஒருவர் - பக்க தெனிய எனும் இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தொடர்பான விசாரணைகளின்போதே, தம் மீது அரசியல் அழுத்தம் பிரயோகிக்கப்ப டுவதாக - பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த அல்வில் தெரிவித்துள்ளார்.

இதனால், தமது கடமையை நேர்மையான வழியில் செய்ய முடி யவில்லை எனவும், அரசியல் அழுத தங்கள் இல்லாத பிரதேசம் ஒன் றிற்கு - தன்னை இடமாற்றி உதவும் படியும் ஆனந்த அல்வில், பொலிஸ் மா அதிபரை கேட்டுள்ளார்.

இவர், தனது விண்ணப்பத்தை வடமேல் மாகாண உதவி பொலிஸ் அத்தியட்சகர் மூலமாகவே செய் துள்ளார். இது தொடர்பாக, பொலிஸ் மா அதிபர் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (01)

# அடையாள அட்டை பெறுவதற்கு மிக விரைவில் புதிய நடைமுறை

தேசிய அடையாள அட்டைக ளைப் பெற்றுக்கொள்ளுவதற்கான இடர்பாடுகளைக் குறைப்பதற்கும், ஒரு நாள் அடையாள அட்டை வழங் கப்படும் திட்டத்தை விரைவுபடுத்த வும், புதிய நடைமுறை கொண்டு வரப் படவுள்ளது.

இவ்வளவு காலமும் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொளவதற்கான, வதிவிட ஆள் அடையாளத்தை கிராமசேவகரே உறுதிப்படுத்தி வந்தார். ஆனால், இனிவரும் காலங்களில் பாடசாலை அதிபர்கள், சமாதான நீதிவான்கள், உயர் பொலிஸ் அதிகாரிகள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளப் புதிய நடைமுறை விரைவில் நடைமுறைக்கு வரப்படவுள்ளதாகத் தெரியவருகி றது. (122)

### கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்திவரும் வருடாந்த கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி - எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்த வுள்ளதால் பதிவுசெய்த கழகங்கள் தங்கள் பதிவுகளை உறுதிப்படுத் தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்ற னர். பதிவுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ள வும்.

# பளைக் கோட்டப் பாடசாலைகளின் புனரமைப்புக்கு 1.5 கோடி ஒதுக்கீடு

## விசேட திட்டத்தின்கீழ் 6 பாடசாலைகளுக்கு உதவி

(ஆழியவளை)

பளைக் கோட்டத்தைச் சேர்ந்த ஆறு பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு, கல்வி அமைச்சின் விசேட திட்டத்தின் கீழ், சுமார் ஒன்றரைக் கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கல்வியமைச்சின் உயரதிகாரிகள் குழுவினர் - அண்மையில் இப்பாடசாலைகளுக்கு நேரடியாக வருகைதந்து, மேற்படி பாடசாலைகளிலுள்ள வளப் பற்றாக்குறைகளை நேரில் கண்டறிந்தபின்பே, இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் - சோரன்பற்று சணேசானந்தா வித்தியாலயம், இயக்கச்சி அ.த.க பாடசாலை, கோயில்வயல் அ.த.க பாடசாலை, மாசார் அ.த.க பாடசாலை, சோரன்பற்று சி.சி.த.க பாடசாலை, முகாவில் அ.த.க. பாடசாலை என்பவற்றுக்கே - கட்டட வசதிகள், தளபாட வசதிகள், விளையாட்டு மைதானங்கள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டம் - பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினூடாகவே நிறைவேற்றப்படவேண்டும் என, கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (122)



இலங்கைக்கான கத்தோலிக்க திருச்சபையின் - நீதிக்கும் சமாதானத்திற்குமான குழு யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடத்திய, சிறுவர் உரிமைகளை மேம்படுத்தும் நோக்கிலான நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் - முதலாவது பரிசுபெற்ற நாடகமான "அவங்க பேசமாட்டாங்க" என்னும் நாடகத்தின் காட்சியினைப் படத்தில் காணலாம்.

படம்: மதன்

## கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றல்

(நவிண்டில்)

கரவெட்டி அரச கால்நடை வைத்தியசாலையில் - எதிர்வரும் 15 ஆம் திகதிமுதல், கால்நடைகளுக்கான தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

கப்பூது, கல்வயல், உடுப்பிட்டி, கரணவாய், துன்னாலை, அல்வாய், மத்தொனி, சமரபாகு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர், தவறாது இந்தத் தடுப்பூசி மருந்தைக் கால்நடைகளுக்குப் போட்டுக்கொள்ளுமாறு -

கால்நடை வைத்திய அதிகாரி எம்.சறோஜினிதேவி தெரிவித்தார்.

# சித்திர அமைப்பின் வருடாந்த மாநாடு

திரைக்கலைச் சங்கத்தின் சம்மேளனமான 'சலனசித்திரம்' அமைப்பின் ஏழாவது ஆண்டுப் பூர்த்தி விழாவும், வருடாந்த மாநாடும் எதிர் வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை- தழிழ்ச்சங்கம் இல: 7, 57 ஆவது ஒழுங்கை, உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு -6 எனும் இடத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்காலத்தில் இலங்கையின் தமிழ்சினிமாவை ஆரோக்கியமான பாதையில் வளர்த்தல் மற்றும் ஆக்கிரமிப்பு கலை கலாசாரத்தை ஒழித்தல் என்பனவே - அம்மாநாட்டின் தொனிப்பொருளாகும். இதற்கென அன்றையதினம் ஆபாசப்பட எதிர் இயக்கம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வின் இறுதியில் சலனசித்திரம் தயாரித்த விவரணப்படமும் காண்பிக்கப்படும். அமைப்பின் கிளைகள் செயற்படும் மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வரைதல் போட்டி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன், வடக்கு - கிழக்கு பிராந்திய முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் - ஆசிரியர் தினத்தை முன்னிட்டுச் சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்கிடையே, வரைதல் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு -

ஒவ்வொரு ஆசிரியரும் தாம் பெற்றிருக்கும் முன்பள்ளிக் கல்வி குறித்து - பயிற்சிகளையும், பொது அறிவையும் பயன்படுத்தி, ஓர் முன்பள்ளி - எவ்வாறான வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்றும், அது எவ்வகையான முறையில் அமைவது சாலப்பொருத்தமானது என்றும் தங்களது சிந்தனையைச் சித்திரம்மூலம் வரைதல் வேண்டும்.

**வரைதல் நிபந்தனை**

1. கடதாசியின் அளவு சராசரி 28.5 செ.மீ x 20.5 செ.மீ.
2. கட்டடத்தின் முன்முகத் தோற்றமும், கிடைத்தோற்றமும் தனித்தனியே இரு கடதாசிகளில் வரைதல் வேண்டும்.
3. கட்டடத்திற்குள் இடம்பெற வேண்டிய கற்றல் செயல்பாட்டு வசதிகள் - கிடைத்தோற்றத்தில் காணப்படவேண்டும்.
4. கட்டடத்திற்கு வெளியே - காணியின் எல்லைக்களும், காணிகளுள் இடம் பெறவேண்டிய செயற்பாட்டு வசதிகளும், முன்முகத்தோற்றத்தில் காட்டப்படவேண்டும்.
5. சராசரி 30 மாணவர்கள் இருக்கக் கூடியதாக முன்பள்ளி அமைய வேண்டும்.
6. ஒவ்வோர் வரைதலின் வலதுபுற கீழ் மூலையில் - ஆசிரியரின் பெயர், முன்பள்ளியின் பெயர், முகவரி என்பன இடம்பெறவேண்டும்.

எனவே, மேலே குறிப்பிட்டதற்கு அமைய வரைந்து, எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்துவதால் வீதி விபத்துக்கள் பெருமளவில் அதிகரிக்கின்றன

(யாழ்ப்பாணம்)

மக்கள் பயணிக்கும் பிரதான வீதிகளில் - சைக்கிள், வாகனங்கள் நிறுத்தப்படுவதால், அந்த வீதியால் செல்லும் மக்கள் - பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன், வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

குறிப்பிட்ட சில வீதிகளில் வாகன உரிமையாளர்கள் - தமது வாகனத்தை நிறுத்தி வைத்துள்ளதுடன், வாகன திருந்துநர்களும், மக்களுக்கு இடையூறாக - வீதிகளில் வைத்தே வாகனத்தைத் திருத்தும் நவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இதேவேளை, சில தனியார் வகுப்பு நிலையங்களின் முன்பு, வீதியின் ஓரமாக ஏராளமான துவிச்சக்கரவண்டிகள் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், பாதசாரிகள் உட்படப் பலர் பயணம் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது. இது தொடர்பாக உரியவர்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

ஏ-9 பாதைதிறந்த பின்பே, அதிகரித்த வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன், அநியாய உயிரிழப்புக்களும், பொருட்சேதங்களும் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் நாடகம் எழுத்துருவாக்கம்

சிறுவர் அரங்கச்செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன், சிறுவர் நாடக எழுத்துருவாக்கப் போட்டி ஒன்றினை, திருநெல்வேலியில் இயங்கும் அருளகம் செயற்திறன் அரங்க இயக்கம் நடத்தவுள்ளது.

நாடகத்துறையில் ஈடுபாடு உடையவர்கள் - இப்போட்டியில் பங்குபற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் பரிசுபெற்று, தகுதிபெறும் நாடகங்கள் - தயாரிப்புக்காக எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தமாதம் 25 ஆம் திகதிக்கு முன்னராகவே நாடக எழுத்துருவை, அனுப்பி வைக்கவேண்டுமாறு வேணடப்பட்டுள்ளது. (58)

**பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம்**

2003 - 2004 கல்வியாண்டிற்கான, பல்க்லைக்க்ழக அனுமதி விண்ணப்பம் - 07.09.2003 ஞாயிற்றுக்கிழமை, காலைமுதல் விநியோகிக்கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் யாழ்ப்பண முகவர்களான- யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# பாரவூர்திகள் தங்கிச்செல்ல கிளிநொச்சியில் இடவசதி!

(ஆழியவளை)

வெளியிடங்களிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு வரும் பாரவூர்திகள் தங்குவதற்கான இடவசதிகளைச் செய்துகொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, விசேட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள முன்னைய பஸ் நிலையத்திற்கு முன்பாக பாரவூர்திகள் தங்கிச்செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் - கரைச்சிப் பிரதேசசபையினரால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(122)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : P.சுவேதிகா
முகவரி : 3 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

ஏழாவது அகவையில்



பெயர் : ஶ்ரீ.கோபிதன்
முகவரி : புத்தூர் மேற்கு, புத்தூர்.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : யோ.பானுப்பிரியன்
முகவரி : கலைமதி, நவிண்டில்.

பத்தாவது அகவையில்



பெயர் : சி.அகிலன்
முகவரி : 123, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றார் ஒப்பம்

# விளையாட்டு அரங்கம்

# ஏட்டுச் சுரக்காய்கள் அல்ல


இது வரைகாலத்தில் டெஸ்ட் வரலாற்றில் 264 பேர் டெஸ்ட்கிரிக்கெட் அணித் தலைவர்களாகக் கடமையாற்றி இருக்கிறார்கள். ஆனால், இவர்களைத் தரப்படுத்துவது எவ்வாறு என்பதில் எந்த விதமான வரையறைகளை மேற்கொள்வது என்பதில் சில சங்கடங்கள் உண்டு. இதே வேளை, ஒரு அணித்தலைவர் எத்தகையவராக இருக்க வேண்டு



மென்பதும் ஒரு கேள்வி. இந்த வகையில் பல்வேறு இயல்புகளை ஆராய்ந்து முதன்மை நிலையில் பத்து அணித்தலைவர்களை வரிசைப்படுத்தியிருக்கிறார்கள். இதில் ஒரு வரையறையாக, இரண்டாம் உலகப் போரின் பின் விளையாடிய கிரிக்கெட் வீரர்கள், குறைந்தது இருபது டெஸ்ட் போட்டிகளிலாவது தலைமைதாங்கியவர்கள் என்ற வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். ஒரேயொரு புறநடையாக - யுத்தத்துக்கு முந்திய காலகட்டத்தில் தலைமை வகித்த டொன் பிரட்மன் உள்வாங்கப்பட, துரதிஸ்டவசமாக இருபது டெஸ்ட் ஆட்டங்களுக்குக் குறைவாக தலைமை வகித்தமை என்ற வரையறையின் கீழ் மிகப் பெருமைவாய்ந்த சேர். பிராங்க் வொரல் தவிர்க்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி, அன்றிலிருந்து இன்றுவரை தீவுப்பற்றால் பிரிந்து நிற்கின்றமை வரலாறு. பிராங்க் வொரல் இந்தப் பிரிவினை எண்ணத்தை மாற்றுவதில் வெற்றிகண்டவர். தொடர்ந்து வந்த கிளைவ் லொய்ட் இதன் தொடர்ச்சிக்காகப் பாராட்டப்படுவதுடன், இளம் தலமுைறையினரின் திறமைகளை வளர்த்தெடுத்த மனிதர் ஆவார். அதுமட்டுமல்ல, கிளைவ் லொய்ட் பற்றிக் கூறும்போது - இவர் கிரிக்கெட் அணித தலைவர் மட்டுமல்ல, இவர் ஒரு உயர் ஸ்தானிகர் போலவே, நட்புறவுப் பாலங்களை வளர்த்துக் கொண்டவர். அதற்காக மதிக்கப்பட்டவர். தற்போதுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்குச்சமமாகப் பேசப்பட்டஅணி 70 களில் பிற்பாதியில் லொயிட் தலைமையில் இருந்து சாதனைகள் பல படைத்தது, மேற்கிந்தியக் கிரிக்கெட் அணி தான். கவாஸ்கார் இந்த அணி பற்றிக் கூறும் போது - இவர்களின் காலகட்டத்தில் எந்த ஒரு மேற்கிந்திய வீரனாவது, எதிரணி வீரனைப் புண்படுத்தும் ஒரு வார்த்தையைக் கூடக் கூறவில்லை என்பதை நான் அறிவேன் என்றார். அதனை லொயிட்டுக்கான புகழாரமாகத்தான் கொள்ளவேண்டும்.

இன்னொரு அணித்தலைவர் - பாகிஸ்தானின் இம்ரான்கான், மிகுந்த கம்பீரமும், ஆளுமையும் கொண்டவர். பாகிஸ்தான் அணி உலகிலேயே திறமையானது என்ற தன்னம்பிக்கை அணியில் வளரக் காரணமாக இருந்தவரே இம்ரான்கான்தான். இவரது தலைமைத்துவத்தின் கீழ், உலகின் பலம்வாய்ந்த அணிகளையெல்லாம் பாகிஸ்தான் வெற்றி கண்டது. 1987 ஆம் ஆண்டில் மைக் கெட்டிங்கின் இங்கிலாந்து அணி, 1986 - 1987 ஆம் ஆண்டின் பின்னர், 1987 - 1988 ஆம் ஆண்டுவரை முறையே தாயகத்திலும், மீண்டும் மேற்கிந்தியத்தீவுகளிலும், சிறப்பாக - பாரம்பரியப் போட்டி நிறைந்த இந்தியாவை 1982 - 1983 ஆம் ஆண்டுகளில் தாயகத்திலும், பின்னர் 1986



- 1987 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் தோற்கடித்தமை என்பன சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. இவர் மிகவும் கௌரவம் எதிர்பார்பதோடு, மிதப்பு நிறைந்த அணித்தலைவர் என்ற பெயர் பெற்றவர். ஆனால், சாதனைகள் புரிந்தவர்.

இன்னொரு அணித்தலைவர் -அவுஸ்திரே



லியாவின் மார்க் டெய்லர். 1999 ஆம் ஆண்டில் மார்க் டெய்லர் அலன் போர்டரிடமிருந்து தலைமைப் பதவியைப் பெற்றுக்கொண்டதும்- விமர்சகர்கள் ஒரு கருத்தை முன்வைத்தார்கள். அவுஸ்திரேலிய அணி - தோல்விகளைச் சந்திப்பதை அலன் போர்டர் தடுத்து நிறுத்தினார். மார்க் டெய்லர் - டெஸ்ட் போட்டிகளை எவ்வாறு வெல்வது என்று சாதித்துக்காட்டினார் என்று கூறினார்கள். மார்க் டெய்லர், தான் தலைமைதாங்கிய பதினான்கு டெஸ்ட் தொடர்களில், பதினொன்றில் வெற்றி கண்டவர். இவரது மிகத்திறமையான வெற்றித் தொடர் என்று கருதப்படுவது- 1994- 1995 ஆம் ஆண்டுகளில் மேற்கிந்தியாவில் வைத்து, மேற்கிந்திய அணியை மண்கௌவ வைத்ததுதான்.

அவுஸ்திரேலிய அணியின் தலைவராக இருந்த அலன் போடர், இன்னொரு சிறந்த அணித்தலைவராகக் கருதப்படுகிறார். இவர் தனது தலைமைத்துவத்தின் முற்பாதியில், பலம் குறைந்த ஒரு அணியுடன் அல்லாடினாலும், பிற்பகுதியில் பெயர் சொல்லக்கூடியதான அணித்தலைவராக இருந்தவர். அணியில் திறமையைப் பாய்ச்சி, ஒன்றுபடுத்தி, வீரர்களுக்குச் சகலவற்றையும் போதிக்கும் நல்லாசானாக இருந்தவர் அலன் போர்டர். இன்றைய அவுஸ்திரேலிய அணியின் எழுச்சிக்கு அன்றைய அலன் போர்டர் சிந்திய வியர்வையும் காரணம் என்பதை மறுக்க முடியாது.

அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ் வோ இன்னொரு பெருமைமிகுந்த அணித்தலைவர். பலமான ஒரு அணியையே ஸ்ரீவ் வோ- மார்க் டெயிலரிடம் இருந்து கையேற்றுக் கொண்டார். அதேவேளை, அவுஸ்திரேலிய அணியை எல்லோரும் அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு உயரக்கொண்டு போனவர். இவரது திறமை, ஆளுமை, தலைமைத்துவப் பண்புகள் விபரிக்கப்படத் தேவையில்லை. இன்று எம் முன்னாலேயே நின்று, சாதனை படைத்துக்கொண்டிருப்பவர் அவர்.

இந்த வகையில் எல்லா அணித் தலைவர்களும், தங்களுக்கே உரிய திறமைகளைக் கொண்டு செயற்பட்டிருக்கிறார்கள். எல்லோருமே தனித்துவமானவர்கள். தலைமைத்துவம் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்



களில், பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. இருந்தும், ஒரு கருத்து மனதில் பளீரெனப் பதிகின்றது. ஒரு பொது நோக்கத்துக்காக, தன் மீது பெரும் நம்பிக்கை கொண்ட ஆண்கள் - பெண்கள் எல்லோரையும், ஒரே அணியில் தனது ஆளுமை மீது நம்பிக்கை கொண்டு, அதனை ஏற்றுக்கொண்டு செயற்படுத்தும் நம்பிக்கையை ஏற்படுத்துவதே தலைமைத்துவம் என்று கூறப்பட்டுள்ளது. இறுதியாக இதுபற்றிக் கூறும்போது -கிளைவ் லொய்ட், இதனை இதற்கும் மேலாகச்செய்து காட்டினார் என்று குறிப்பிட முடிகிறது.

நன்றி **SPORTS STAR**

## TOP TEN CAPTAINS

| | | |
|---|---|---|
| 1. | கிளைவ் லொயிட் | (மே.இந்தியத்தீவுகள்) |
| 2. | இயன் செப்பல் | (அவுஸ்திரேலியா) |
| 3. | ஸ்ரீவ் வோ | (அவுஸ்திரேலியா) |
| 4. | டொன் பிரட்மன் | (அவுஸ்திரேலியா) |
| 5. | மார்க் டெய்லர் | (அவுஸ்திரேலியா) |
| 6. | இம்ரான் கான் | (பாகிஸ்தான்) |
| 7. | றிச்சி பெனோ | (அவுஸ்திரேலியா) |
| 8. | மைக் பிறெயர்லீ | (இங்கிலாந்து) |
| 9. | அலன்போர்டர் | (அவுஸ்திரேலியா) |
| 10. | றே இலிங்வேர்த் | (இங்கிலாந்து) |

# அயல் வீட்டு மல்லிகை

பாரீஸ் உலகத்தடகளப் போட்டிகளில் - இந்திய நீளம்பாய்தல் வீராங்கனை அன்ஜு ஜோர்ஜ் 6.70 மீற்றர் தூரம் கடந்து, வெண்கலப் பதக்கம் பெற்றார். இது இந்திய தடகள வரலாற்றில் பெற்ற முதல் சர்வதேசப் பதக்கமாகக் கருதப்படுகிறது. இதற்கொரு காரணம் உண்டு. மில்காசிங் 1950 களின் பிற்பகுதியில், 400 மீற்றரில் சாதனை படைத்தவர்.

அதேபோல், பி.ரி.உஷா 80 களில் பதினொரு ஆசிய தடகளப் பதக்கங்கள் பெற்றவர். ஆனால், இதுவரை உலகளாவியரீதியில் யாரும் பதக்கம் பெற்றதில்லை, அன்ஜு ஜோர்ஜ் என்ற வீராங்கனையைத்தவிர. இதனாலேயே இந்த நிமிடத்தில் இந்தியாவின் முதன்மையான தடகள நட்சத்திரமாக இவர் திகழ்கிறார். கடந்த காலங்களில் பல் - உலக தடகளப் போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டாலும், பதக்கங்கள் எதனையும் பெறவில்லை. கேரள மாநிலத்தில் பிறந்த இவர் - ஆரம்பத்தில் உயரம் பாய்தல், ஹெப்டதோலன், நீளம் பாய்தல் போன்றவற்றில் ஈடுபட்டாலும், நீளம்பாய்தலின் தன் திறமையை உணர்ந்துகொண்ட இவர், பாடசாலை நாட்களிலேயே நீளம் பாய்தலில் தன் முழுக்கவனத்தையும் செலுத்தினார். இருந்தும், சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு - உபாதைகளால் அற்றுப்போக, பின்னர் கொமன்வெல்த் போட்டிகளில் வெண்கலமும், புசான் ஆசிய தடகளப் போட்டிகளில் தங்கப்பதக்கமும் வென்றார். மேலும் அண்மையில் ஐரோப்பிய தடகளப்போட்டிகளில் பங்கு கொண்டு, ஸ்ரொக்ஹோம் **Super Grand Prix** இல் வெள்ளிப் பதக்கம் வென்றார்.




அஞ்ஜு பொபி ஜோர்ஜ்

அன்ஜுவின் அடுத்த இலக்கு- ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள். ஏதென்ஸில் பதக்கம் வெல்வேனாயின், எனது இன்னொரு கனவும் நனவாகிவிடும் என்கிறார் இவர்.

இவருக்கு ஐந்து வயதாக இருக்கும்போதே, ஒலிம்பிக் பதக்கம் பெறவேண்டும் என்ற ஆசை கொண்டவர் என்கிறார் இவரது தாயார். இந்தியாவைப் பொறுத்தவரை பெருந்தொகை மக்களைக்கொண்ட நாடாக இருந்தும், சர்வதேசரீதியில் தடகளப் போட்டிகள் நடைபெறும்போது, வெறுங்கையுடன்தான் திரும்புவது வழக்கம் என்ற குற்றச்சாட்டு என்றுமே இருந்து வந்திருக்கிறது. அதனை முறியடித்திருக்கிறார் அன்ஜு.

# அமெரிக்க ஏவுகணை



"அசைக்கமுடியலியே"

பாரீஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் ஐக்கிய அமெரிக்கா, மனம் வெதும்பிய ஒரு நிகழ்வு 4x100 மீற்றர் அஞ்சலோட்டத் தங்கப்பதக்கம்- தங்களுக்கு நிச்சயம் இல்லையென்று உருவாகிப்போன நிலைமைதான். கொறிஸ் கிறீன், ரிம் மொண்ட் கொமரி மற்றும் ஜொன்டிரமண்ட் ஆகிய நட்சத்திர ஓட்ட வீரர்கள் மூவரும் ஒவ்வொரு காரணங்களால் அணியில் இல்லாமல் போக, இவர்கள் இல்லாமல் 4x100 மீற்றர் தங்கமும் இல்லையென்றாயிற்று. இந்த நிலையில், அமெரிக்க வீரர்கள் ஜோண் கேப்பல், டார்விஸ் பேட்டன், பேர்ணாட் வில்லியம்ஸ் மூவரும் ஓடி முடித்து, இறுதியாக ஜோசுவா ஜோன்சனிடம் அஞ்சலோட்டக் கோலைக் கொடுத்தபோது, பிரித்தானியரின் சேம்பர்ஸ் ஏலவே மூன்று சுவடுகள் முன்வைத்துவிட்டார். இடையில் பிரேசில். ஆகவே, ஜோசுவா இறுதி **LAP** ஐ மூன்றாவதான நிலையில், ஒரு மீற்றருக்கும் பின்னர் தொடங்குகிறார். ஆனால், ஜொசுவா நிலைமையைத் தலைகீழாக மாற்றுவார் என்று யாருமே நினைத்திருக்கவில்லை. மேலும், பிரித்தானியரின் சேம்பர்ஸின் ஒரு மீற்றர் இடைவெளியை நிரப்புதல் சாத்தியமே இல்லை என்றே கருதப்பட்டது. ஆனால், ஜோசுவா ஜோனசன் அதி அற்புதமாக ஓடி, அமெரிக்காவிற்கு தங்கம் வென்றார். அமெரிக்க அஞ்சலோட்ட அணி எடுத்துக்கொண்ட நேரம் 38.6 செக்கன்கள். வெள்ளி வென்ற பிரித்தானியா எடுத்த நேரம் 38.08 செக்கன்கள். வெண்கலம் வென்ற பிரேசில் எடுத்துக்கொண்ட நேரம் 38.87 செக்கன்கள்.

**4x400** மீற்றர் ஆண்கள் அஞ்சலோட்டத்திலும், பின்னர் அமெரிக்காவிற்கு நெருக்கடியைக் கொடுத்தாலும், நூலிடையில் அமெரிக்கா 2:58.88 என்ற நேரத்தில் தங்கம் வெல்ல, பிரான்ஸ் 2:58.96 என்றும், ஜமெய்க்கா 2:59.60 என்ற நேரத்திலும் வெண்கலம் வென்றார்கள்.

**மக்டலின்.**

SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS

# கொக்குவில் இந்துவின் இளம்புயல்



சண்டே ஒப்சேவர் பத்திரிகை நிறுவனமும் - பாட்டா கம்பனியும் சேர்ந்து நடத்திமுடித்த பாடசாலை மாணவர்களுக்கிடையேயான சிறந்த கிரிக்கெட் நட்சத்திரங்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சியில் - யாழ்ப்பாணம். கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிரடி கிரிக்கெட் வீரர் சந்திரநாதன் மதுசன் - வடமாகாணத்துக்கான சிறந்த கிரிக்கெட் வீரனாக, கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து, பாட்டா கம்பனி நிர்வாகப் பணிப்பாளர் கிம் பிறட்லியிடமிருந்து விருதைப் பெற்றிருக்கிறார்.

18 வயதான இவர், ஒரு அற்புதமான கிரிக்கெட் வீரர். கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் ஆட்டங்கள் மிகவும் சிறப்பானமுறையில் காணப்பட்டன. ஆனால், இன்று கிரிக்கெட் மட்டுமல்ல - எந்த ஒரு விளையாட்டானாலும் சோபையிழந்தே காணப்படுகிறது.

ஆனால், இன்றும் சில கிரிக்கெட் ரசிகர்கள்- மதுசன் போன்ற இளம் ஆட்டக்காரர்களின் கிரிக்கெட் ஆட்டத்தினைக் கண்டுகளிப்பதற்காக வருகின்றார்கள் என்றால், இவர் அவர்களுக்கு விருந்தளித்துத்தான் இருக்கின்றார். இவருடைய கிரிக்கெட் காலத்துக்கான மொத்த ஓட்டங்கள் 738. அதிலே 4 அற்புதமான நூறு ஓட்டங்களும், 2 ஐம்பது ஓட்டங்களும் அடங்கும். அத்துடன், மொத்தமாக 31 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருக்கின்றார்.

க.பொ.த உயர்தரப் பிரிவு 2004 இல் பயின்றுகொண்டிருக்கின்றார். இவருடைய தந்தையார் பொன்னுத்துரை சந்திரநாதனும் ஒரு கிரிக்கெட் ஆட்டக்காரர். இவர் 1966 தொடக்கம் 1974 வரை கொக்குவில் இந்துக் கல்லூரிக்காக ஆடியவர்.

தற்போது நில அளவைத் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராக இவர் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். அத்துடன், மதுசனுடைய தாயார் ரதி சந்திரநாதன். கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியையாக இருக்கின்றார்.

தாயும், தந்தையும் மகனுடைய எந்தவொரு கிரிக்கெட் போட்டியையும் தவறவிடுவதில்லை. மதுசனைப் பொறுத்தவரையில், கிரிக்கெட் உலகில் பெரும்பாலும் பின்தங்கிய யாழ்ப்பாணத்திற்குப் பெருமை சேர்த்திருக்கின்றார். இவர், யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டு, அதன்மூலம் தேசிய அணிக்குத் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதுதான் கிரிக்கெட் ரசிகர்களின் பேரவா.

**P.N. சுதர்சன்.**

# எனக்கே எனக்கா

‘ஜொன்ரி றோட்ஸ்’- இவருக்கு அறிமுகம் தேவையா. இவரது களத்தடுப்பு சாதனைகள் இவரது கிரிக்கெட் வாழ்வின் தங்கக் கிரீடங்கள். இதோ இன்னொரு மாபெரும் விருது ஜொன்ரிக்கு. அதாவது கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் அவரது பெயர் பதியப்படப் போகிறது. இதற்கான போட்டியொன்றில் வென்றதன் மூலமே - ஜொன்ரி இந்தத் தகுதியைப் பெறப்போகிறார். அதாவது, இலக்குகள் நடப்பட்டு (**UNGUARDED STUMPS**) ஐந்து வெவ்வேறு கோணங்களில் இருந்து இலக்கு நோக்கி எறிதலே அந்தப் போட்டி. **COVER POINT - EXTRA COVER - MIDON - MIDOFF - BACWARD SHORT LEG** ஆகியனவே இந்த நிலைகள். இந்த ஐந்து நிலைகளில் இருந்தும் தலா நான்கு முறையாக, மொத்தம் இருபது எறிகள் அனுமதிக்கப்பட்டது.



“பறக்கும் றோபோ”

போட்டி நடைபெற்றது - குளோஸ்ரர்ஷயர் அணியின் ஜொன்ரி றோட்சுக்கும், வோரிக்ஷயரின் டிரெவர் பென்னி என்பவருக்கும் இடையிலாகும். இதுவே முதலாவது நிகழ்வென்பதால் எல்லாமே சாதனைதான். நான் ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளேன் என்பதை, நான் உணர்ந்து கொள்ளவேயில்லை என்கிறார் ஜொன்ரி. இதே வேளை பென்னி கருத்துக்கூறுகையில் - நான் நிரம்பவே பயிற்சிகள்செய்தேன். ஆனால் ஜொன்ரி எல்லா நிலைகளிலும் முதல்தர தடுப்பாளர். எனவே அவர் வென்றது எனக்கு மகிழ்ச்சியே என்று கூறியிருக்கிறார். இந்தப் போட்டியானது இலத்திரனியல் சாதனைகளின் ஊடாகப் பதியப்பட்டு கின்னஸ் புத்தகத்தில் பதியப்படப்போகிறது.. ஜொன்ரி றோட்ஸ் சாதனை வீரன்தான். அதிலென்ன சந்தேகம்?

**வெரோனிக்கா -**

# இதுவும் சந்தோஷமே



இருசகாப்தங்கள்

இன்னொரு மில்லியன் கணக்கான டொலர்கள் கொண்ட விளம்பரம் ஒன்றிற்கு - பிரேஸில் நட்சத்திரம் டொனால்டோ கையெழுத்திட்ட வேளையில், ஒரு ஆசையை வெளியிட்டுள்ளார். அதாவது, பிரேஸிலின் சகாப்தம் - பீலே அடித்த கோல்களின் எண்ணிக்கைக்கு அப்பால் தான் அடிக்கவேண்டும் என்பதே அந்த ஆசை. பிரேசில் உதைபந்தாட்ட தரவு - வஸ்கியின் விபரங்களின்படி - சர்வதேச ஆட்டங்களில் பீலே அடித்த கோள்கள் 95. ஆனால், 70 சர்வதேச ஆட்டங்களில் இதுவரை 46 கோல்கள் போட்டிருக்கிறார்கள். டொனால்டோ - பீலேயை நெருங்குவதே என்ஆசை என்கிறார் டொனால்டோ. அண்மையில் ஆரம்பிக்கப்பட இருப்பது - அடுத்த உலகக்கிண்ணப் போட்டிக்கான தென்அமெரிக்கப் பிராந்திய உதைப்பந்தாட்டப் போட்டிகள். இதில் பிரேஸில் விளையாடும் சாத்தியம்முள்ளது.

பதினெட்டு ஆட்டங்களில் - பன்னிரண்டு கோல்களாவது அடிக்க முடியும் என்று டொனால்டோ நம்புகிறார். டொ்னால்டோ இதுவரையில் உலகக்கிண்ண நுழைவு ஆட்டங்களில் விளையாடியது இல்லை. பதினேழு வயதாக இருக்கும்போது- 1994 இல் நேரடியாக தேசிய அணிக்கு அழைக்கப்பட்டார். 1998 இல் பிரேஸில் இயல்பாகவே இறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றது. இதனால், டொனால்டோ பல ஆட்டங்களில் விளையாடும் சந்தர்ப்பத்தை இழந்தார். அதேபோல, கணுக்கால் உபாதையால் 2002 இல் சகல தகுதிகாண் ஆட்டங்களில் விளையாடும் சந்தர்ப்பத்தை இழந்தார். அடுத்த உலகக் கிண்ணப்போட்டிகளுக்கு பிரேஸில் இயல்பாகவே தகுதியென்றாலும், **FIFA** இன் புதிய சட்ட விதிகளின் படி பிரேஸில் தகுதிகாண் ஆட்டங்களில் கலந்து கொள்ளவே வேண்டும். (இது டொனால்டோவுக்கு நல்ல வாய்ப்பு).

**-றோஜா-**

# என்றும் இருள் அல்ல



“எம்மை யாரும் வெல்லமுடியாது”

ஒன்பதாவது உலக தடகளப்போட்டிகள் முடிவடைந்துவிட்டன. எதிர்பார்க்கப்பட்டது போலவே ஐக்கிய அமெரிக்கா பதக்க வரிசையில் முதலிடம் பெற்றுக் கொண்டது. ஐக்கிய அமெரிக்க பெற்றுக் கொண்ட தங்கங்கள் மட்டும் பத்து. இரண்டாவது இடத்தில் ரஷ்யாஆறு தங்கப்பதக்கங்களைக் கைப்பற்றி தக்கவைத்துக் கொண்டது. எத்தியோப்பியா தங்கம் மூன்று பெற்று மூன்றாவது இடம்பெற்றது. இறுதிநாளில் நடைபெற்ற மிகச் சுவாரஸ்யமான நிகழ்வுகளான 4x100 மீற்றர் பெண்கள் அஞ்சலோட்டம், 4x400 மீற்றர் பெண்கள் அஞ்ச லோட்டம் மற்றும் 4x400 மீற்றர் ஆண்கள் அஞ்சலோட்டம் ஆகிய நிகழ்வு என்பவற்றில் பெற்ற தங்கப்பதக்கங்கள் அமெரிக்காவின் முதன்மையை உறுதிசெய்தன.

இன்னொருபுறம் இருண்டகண்டம் எனப்பட்ட ஆபிரிக்காவில் இந்த தடகளப் போட்டிகள் பெரும் ஆர்வத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

5000 மீற்றர் ஓட்டத்தில் கென்யாவின் பதினெட்டே வயது நிரம்பிய எலுட்கிப்சோக் குமாரோக்கோஷன், எல்குராஜைப் பின்தள்ளி தங்கப்பதக்கம் வென்றார். எதிர்பார்க்கப்பட்டது போலவே எல்குராஜ் 5000 மீற்றரில் தங்கம் வென்றிருந்ததால் - 1924 ஒலிம்பிக்கில் 1500 மீற்றர், 5000 மீற்றர் இரண்டிலும் பின்லாந்தின் பவல் நூர்மி என்பவர் புரிந்த சாதனை முறியடித்திருப்பார்.

முன்னதாக - மகளிர் மரதன் ஓட்டத்தில் கென்யாவின் கத்தரின் என்டேர்பார் தங்கம் வென்று, கென்யாவின் பெருமையை நிலைநாட்டி இருந்தார். வட ஆபிரிக்கா நாடுகளில் ஒன்றான அல்ஜீரியாவின் ஜாபிர் சைட் குர்ணி - 800 மீற்றர் ஓட்டத் தில் தங்கம் வென்றமையும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, தென்னாபிரிக்கா- ஆண், பெண், ஆகியோருக்கான உயரம் பாய்தல் இரண்டு நிகழ்வுகளிலும், இரண்டு தங்கங்க ளைச் சுவீகரித்துக் கொண்டார்கள்.

இதேவேளை, எத்தியோப்பியாவின் கெனனீஸா பிக்கெலே - ஆண்களுக்கான 10, 000 மீற்றர் ஓட்டத்தில் தங்கங்கத்தை வென்றிருந்தாலும், தோல்விகண்டவர்களான ஜெப்ரலாசி மற்றும் சிலேசி ஆகியோரும் பிரபலமானவர்களே. இதேவேளை, பிக்கேலே 5000 மீற்றலில் வெண்கலப் பதக்கத்தையே பெறமுடிந்தது ஒரு ஏமாற்றம்தான்.

எனினும், நீண்ட தூர ஓட்டங்கள் என்றால், அநேகமாக கிழக்கு ஆபிரிக்க நாடுகளான - கென்யா, எந்தியோப்பியா என்பன ஆதிக்கம் செலுத்துவதை அவதானிக்கமுடிந்தாலும், ஆபிரிக்கா முழுவதும் இந்த வேகம் பரவிவருவதை காணமுடிகின்றது.

**-மக்டலின்**

**IAAF** International Association of Athletics Federations

Athletics-World championships final medals table

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 10 | 8 | 2 | 20 |
| ரஷ்யா | 6 | 8 | 5 | 19 |
| எதியோப்பியா | 3 | 2 | 2 | 7 |
| பெலரஸ் | 3 | 1 | 3 | 7 |
| பிரான்ஸ் | 2 | 3 | 2 | 7 |
| சுவீடன் | 2 | 1 | 2 | 5 |
| கென்யா | 2 | 1 | 1 | 4 |
| தென்னாபிரிக்கா | 2 | 1 | 1 | 4 |
| மொரோக்கோ | 2 | 1 | 0 | 3 |
| கிறீஸ் | 1 | 1 | 2 | 4 |



பரீஸ் தடகளப் போட்டியில் வெற்றியீட்டிய நாடுகள் பெற்ற பதக்கங்களின் விபரம் ஒரே பார்வையில்...

# ‘எங்களுக்கும் பொருந்தும்’



400 மீற்றர் சாதனை வீரன் மைக்கல் ஜோன்சன் - தற்போது **B.B.C.** விளையாட்டு விமர்சகரும்கூட. இன்று எல்லோராலும் பெரிதாகப் பேசப்படும் 100 மீற்றர் ஓட்டம் பற்றி மைக்கல் ஜோன்சன் கருத்துக் கூறும்போது - எதிர்வரும் வருடங்களில் யாருமே 100 மீற்றர் ஒட்டத்தில் ஆதிக்கம் செலுத்தமுடியாததென்ற உண்மையைத் துலாம்பரமாக எடுத்துக்கூறியுள்ளார். நீண்டகாலத்துக்கு ஒரு நிகழ்வில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமாயின், தொடர்தகைமையைப் பேணவேண்டியது அவசியம் என்பது இவரது வாக்கு. இதற்குத் தொடர்ச்சியான பயிற்சியைப் பெறவேண்டும். அதன்மூலம், உடற்தகுதியை மேம்பாடடையச் செய்யவேண்டும். மேலும், நிகழ்வின் தன்மை பற்றி தெளிவு இருக்கவேண்டும். அதற்கேற்றபடி ஓடவும் வேண்டும். இவற்றைப் பின்பற்றாவிட்டால், தோல்விதான் என்கிறார்.

பாரீஸ் உலக தடகளப்போட்டிகளில் - 100 மீற்றர் ஓட்டத்தைப் பார்த்தபின்பே, மைக்கல் ஜோன்சன் இந்தக் கருத்துக்களைக் கூறிஇருக்கிறார். மொனட் கொமரி - உலக சாதனை நேரமாக 100 மீற்றரில் கொண்டிருக்கிறார். ஆனால், பாரிஸில் தோல்வி. அவர் வென்றிருக்கவேண்டும். ஏன் வெல்லவில்லை. இவையே காரணம். மொரிஸ் கீரினை எடுத்துக்கொள்ளுங்கள். இவரிடம் நீண்டகாலமாகத் தொடர்தகைமை இருக்கவில்லை. எனவே, அவரது தோல்வி ஆச்சரியம் அல்ல என்கிறார் சேம்பர்ஸ். முதல் சுற்றுப்போட்டிகளில் முழுத் திறமையையும் காட்டவில்லை என்றுதான் நினைத்தேன். ஆனால், அவரது திறமையே அவ்வளவுதான். ஏன் தங்கம் வென்ற கிம் கெலின்ஸ், எத்தனை நாளைக்குத் தனது முதன்மையை வைத்திருக்கப்போகிறார் என்பதுகூடக் கேள்விக்குறிதான். இவர் இன் னும் சில தடகளப்போட்டிகளில் பதக்கங் கள் வெல்லக்கூடும். ஆனால், சில வருடங்கள் முதன்மை வகிப்பவரா என்றால், இல்லை என்றுதான் செல்வேன் என்கிறார். மைக்கல் ஜோன்சன் சொல்லும் வார்த்தைகள் என்றும் பொன்னானவை. இவர் யார்யாரைப் பற்றிக் குறிப்பிட்டுச்சொல்லி இருக்கிறார் என்பதற்கப்பால், எமது இளந் தலைமுறை வீரர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கிறார் என்று கூறினால், அதனை யாரும் மறுத்துச்சொல்லமாட் டார்கள் என்று நம்பலாம்.

**-எஸ்தர்.**


SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS SPORTS

## தெல்லிப்பளை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான இரதோற்சவ சிறப்பு மலர் - 2003

## தேர்த் திருவிழாவின் மகத்துவமும் அது உணர்த்தி நிற்கும் தத்துவமும்

ஆன்மாக்கள் லயிக்கும் இடமாக அமைந்த ஆலயங்களுக்கு நாம் செல்வதால், இறையருள் பெற்று நல்வாழ்வு பெறுகின்றோம். எங்கள் சமயத்திற்கு ஆணிவேராக விளங்குவது இந்த ஆலயங்கள் தான். ஆலயங்களிலே மனமொருங்கி, தவம்புரிய - தலவிருட்சங்களும், தூய்மைக்கு உதவ - தீர்த்தமும், பெருமைதருவதாக அமைந்திருக்கும். திருக்கோயில் திருவிழாக்கள் - முப்பொருள் உண்மையை, இறைவனின் ஐந்தொழில் விளக்கத்தை மக்களுக்குத் தெரியப்படுத்தும் செயற்பாடுகளாகும்.



தேரின் தோற்றத்தை மனத்திலே சிந்தித்துப் பார்போமாயின், அதன் முழுவடிவமும் கொழுந்துவிட்டு சுவாலித்து எரியும் ஆகுதியும், அக்கினியின் அமைப்புக்கு ஒத்திருப்பதனைக் காணலாம். இது இறைவன் திருக்கரத்தேயுள்ள அக்கினி சங்காரத்தைக் குறிப்பதாகும். இதனைக் கருத்திற்கொண்டே புதுமணத் தம்பதிகள் ஓர் ஆண்டுவரை தேர்முடி பார்க்கக்கூடாது என ஓர் வழக்கமுண்டு.

முப்புரங்களையும் அழிப்பதற்குப் புறப்பட்ட பரம்பொருள் - பூமியைத் தேராகவும், சூரியன், சந்திரனை அதன் சில்லுகளாகவும், நான்கு வேதங்களையும் அதனை இழுக்கும் குதிரைகளாகவும் அமைய, அதில் எழுந்தருளிச் சென்றார். இது உலகம் முழுவதும் தன்னுள் அடக்கம் என்பதை உணர்த்துகிறது. மனித வாழ்வுடன் தேரின் அமைப்பை மேலும் ஒப்பிடும்போது, மனிதன் ஆவதற்கு அன்பு, அறம், அருள், அறிவு நெறிகளில் செல்லவேண்டும். இவற்றை உணர்த்தவே தேரின் சில்லுகள்- சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களைக் குறிக்கிறது. வாழ்க்கைப் பாதையில் எத்தடையையும் வெல்லக்கூடிய நேர்மை, நிதானம், தூய்மை, நீதி என்பன பண்பாய் அமையவேண்டும். அதனை அறிவுறுத்தவே நான்கு வேதங்களும் குதிரைகளாகித் தேரை இழுக்கின்றன. சீரிய குணங்களே உயர்வுதரும். அதற்குப் புறம்பானவையை கைக்கொண்டால் - மோகம், மதம், ராகம், விஷாதம், சோஷம், வைசித்திரியம், அரிசம் ஆகிய குணங்களின் வயப்பட்டு, சிற்றின்ப நுகர்ச்சிக்கும், போர்ச்சிந்தைக்கும், ஆரவாரத்தன்மைக்கும் அடிமையாகி, அவலமுற நேரிடும். இவ்வுண்மையைத் தேரின் கீழ்கண்டத்தில் பொருத்தப்பட்டுள்ள சிங்க, மகர, யாளி, குதிரை, விக்கிரசு, ப,தக்கட்டைகள் வலியுறுததுகின்றன. பூலோக வாழ்வில் மனிதமனத்தே; சீவகாருண்யமில்லாத லோபகுணம், பிரபஞ்ச ஆசை, விபரீத உணர்வு, அகங்காரம் என்பன கவியும்போது, கேடு சூழும். இக்கோரக் குணங்களின் தாக்கத்தைப் பிரதிபலிக்கவே, சிம்மாசனத்தில் நான்கு சிங்கங்கள் இடம்பெறுகின்றன. மனிதனை அஞ்ஞானம், அபிமானம், ராகாதிகுணம், துக்கம், விடயப்பற்று, பலவித கன்மம் உபாதி, அவத்தை ஆகியன பல வழிகளால் பிணித்து, கேட்டுக்குளளாக்குகிறது. தேரின் எட்டுத்திசைகளிலும் பூட்டப்பட்டுள்ள யாளிகள் இவற்றை மெய்ப்பிக்கின்றன. இவ்வகை இழிவுகளுள் அழுந்தும்போது - மனித மனம் சஞ்சலங்களுக்குப்பட்டு அலையும். இதனைப் புலப்படுத்தவே - தேரில் குஞ்சங்களும், வாகுமாலைகளும் ஒரு நிலையின்றி அசைகின்றன. வேதாந்த உபாங்க மநு சாஸ்திரங்கள் மணிகளாகத் தேரில் அமைந்து ஒலி எழுப்புகின்றன.

32 தத்துவங்களும் - 32 குத்தக்கால்களாகத் (பவளக் கால்கள்) தேரின் மேற்பகுதியைத் தாங்கி நிற்கின்றன. சுத்தவித்தை, காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மூலப்பிரதி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், நிலம், நீர், தீ, வளி, வான், மெய், வாய், கண், மூக்கு, செவி, வாக்கு, பாதம், பாணி, பாயு, உபதம் ஆகியன 32 தத்துவங்கள் ஆகும். புனிதவாழ்வு அமைப்பதற்கு, நெஞ்சில் புனிதம் குடிகொள்ள வேண்டும். இவற்றைத் தெளிவுபடுத்தத் தேரின் விதானமாகப் பந்தல் அமைந்து, அழகூட்டியும் மனிதன் புனிதநிலைக்கு உள்ளாகும்போது, மனதில் பதிந்து இருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் அழிந்து, மனம் ஒடுங்கும். இப்படி, முறையை நிதர்சனப்படுத்தவே தேரின் பண்டிகை மேலோங்கி மூன்று நிலைக்குள்ளாகி ஒடுங்கிச் செல்கிறது. இவ்வாறு ஒரு முகப்படுத்தப்பட்டு, புனிதப்பட்ட மனம் - ஒளிமயமாகப் பிரகாசிக்கும். இந்தத்தன்மையை மகாவிமானம் (கர்ணகுடம்) தெளிவுறுத்தும். புனிதன்- உலகுக்கு நிழல்போல் இருந்து நலம் செய்விப்பான். இத்தத்துவத்தை கொண்டுள்ளது உச்சிக்குடை.

தேர் என்பது - கோயிலின் அமைப்பு போன்றது எனவும், தேரின் அடிப்பாகம் - பூலோக வாழ்க்கையையும், மோல்பாகம் - சுவர்க்கலோக வாழ்க்கையையும் சித்தரிக்கின்றன.

இந்த சிற்ப அமைப்பு முறைக்கான சாஸ்திரங்களின் அடிப்படை ஆகம விதிகளே. இவற்றைத் தழுவியும், விரிவாகவும் சிற்ப சாஸ்திரங்கள் அமைந்துள்ளன. தேர் அமைப்புக்கும் கட்டடக்கலைக்கும் உள்ள தொடர்பு பற்றி நோக்கும்போது- மூலமூர்த்திக்கேற்ப கோயில் அமைப்பும், இதன் கர்பக்கிரக காற்புறவாய் அமைப்புக்கேற்பத் தேர் அமையும் என்றும், சாஸ்திரங்கள் கூறுகின்றன. கோயிலும், தேரும் அமைப்பில் ஒரே தன்மையானவை.

அருள்மிகு தெல்லிப்பளை துர்க்கை அம்பாள் தேர் உலா வரும் காட்சியினை நாம் இன்று காண்போம். அணிதிரண்டு வாரீர். அவள் அருள்மழை வெள்ளத்தில் குளிப்போம் வாரீர். அன்னையின் அருளாட்சி வையமெல்லாம் நிறைந்து விளங்குகின்றது.

*- சாந்தி நாவுக்கரசன்.*

### அன்னையும் நீயன்றோ!

அன்னையும் நீயன்றோ அகிலமதில்
ஆரெமக்கு உறுதுணைதான் நின்னை யன்றி
நன்னகர் தெல்லிநகர்த் துர்க்கையம்மா!
நளினமிகு சித்திரத் தேரில் ஏறி
இன்னல்கள் தீர்த்திட வாராய் அம்மா!
இடர்தரும் மஹிஷனை வதைத்த தேவி!
பன்னக பூஷணி துர்க்கையம்மா!
பதமலர் கதியெனச் சரணடைந்தோம்!
கல்விதனை வேண்டியே காளிதாசன்
கதறிட ஓடோடி வந்து நீயும்
பல்விதக் கவிமழை சொரிய வைத்தாய்!
பட்டர்க்கு அம்புலி காட்டி வைத்தாய்!
வல்லவளே துர்க்கையம்மா மஹிஷன் தன்னை
வாளினால் வதைத்தவளே எம்வினைகள்
கொள்பவளே சித்திரத் தேரில் ஏறி
குதூகலம் தந்தருள் செய்வாயம்மா!

*- மஹா வித்வான்.*




கர்ப்பிணித் தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்றபோஷாக்கு நிறைந்த சத்து மா
ஜீவாகாரம்
அன்னா தொழிலகம்
T.P. 222 - 3565 (சி-1450) இணுவில்.

அம்பாள் தொலைத்தொடர்பு சேவை
துர்க்காபுரம்.
T.P. 021 - 222 - 3470 (சி-1447)


பொன்மகள் நகையகம்
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0777 - 066427

தேங்கிய துயரினை நீக்கிடும் அம்மா
துர்க்கா துரந்தரியே - இன்று
தேரேறி வருகின்ற - அம்மா
அடியவர் உள்ளத்தில் பேரொளி
அருளிடும் அம்மா.
தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்
தலைவர், பொதுமுகாமையாளர், பணிப்பாளர், பணியாளர்கள்.
(சி-1454)

PURE GINGELLY OIL
சுத்தமான நல்லெண்ணெய்
தரமான எள்ளில் சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பெற்றது. கேட்டு வாங்குங்கள்.
A PRODUCT OF MULTI OIL INDUSTRIES
LIMITED INUVIL (சி-1448)

C.C.A
K.K.S. வீதி, சுன்னாகம்.
(சி-1451) - நிர்வாகிகள்

உங்களுக்குத் தேவையான புத்தகங்கள், பாடசாலை,
அலுவலக உபகரணங்களை மலிவாகவும், நியாய
விலையிலும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
T.P. 021 - 222 - 5542 (சி-1453)
212,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரார் கல்வி நிலையம்
ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.
கிளை:
மல்லாகம் சந்தி. (சி-1452)

# தெல்லிப்பளை
# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
# இரதோற்சவ சிறப்பு மலர் - 2003

## துர்க்கை அம்பாளின் தேர்விழா திருக்காட்சி

துர்க்கை அம்பாள் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழிலுக்கும் உரியவள். இவற்றிலே அழித்தல் என்கின்ற சங்காரத் தொழிலுக்கு உரிய நாளாகத் தேர்த்திருவிழா அமைகிறது.


பூலோக வாழ்க்கை நன்கு சிறப்பாக நடைபெறவும், நல்லவை பெருகவும், அல்லாதன அழியவும் வேண்டிய சக்தியை உணர்த்துவது தேர்விழா ஆகும்.

ஈழத்தமிழ் மக்கள் அனைவருக்கும் நிரந்தர சமாதானத்தையும், அமைதியையும் வேண்டித் தேர்த் திருவிழா நாளாகிய இன்று துர்க்காதேவியின் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

*-தங்கம்மா அப்பாக்குட்டி.*

## தேசநலன் காக்க தேரேறி பவனிவரும் துர்க்காதேவி

வரலாற்று சிறப்பு மிக்க- தெல்லிப்பளை துர்க்காதேவி அம்பாளின் மஹோற்சவ, சிறப்பு உற்சவ தேர்த்திருவிழா அற்புதமாக நடைபெறுகிறது. அன்னை துர்க்கை தேரேறி வருகிறாள். பூலோக வாழ்க்கை நன்கு நடைபெறுவதற்கு சக்தியின் என்னென்ன பகுதிகள், என்னென்ன பாங்கில் அமைந்திருக்க வேண்டும் என்பதை துர்க்கா தேவியின் சொரூபம் நன்கு விளக்குகிறது. பிரபஞ்சம் முழுவதிலும் அவள் வியாபித்திருக்கிறாள். எனினும், ஆண்டுக்கொரு தடவை அவள் ஹரிமாசலத்திலிருந்து பூமியின் சமவெளிக்கு எழுந்தருளுகிறாள் என்பது கோட்பாடு. புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி அவளுடைய வருகையைக் குறிக்கிறது. மழைபெய்து ஓய்ந்தான பிறகு நிலவுலகெங்கும் சக்தி எழுந்தருளியிருப்பதன் அறிகுறிகள் தென்படுகின்றன. அவள் மண்ணுலகுக்கு வரும்பொழுது அவளுடைய அம்சங்களாகிய லஷ்மி, சரஸ்வதி, கணேசன், கார்த்திகேயன் ஆகியவர்கள்- அவளுடன் வருகிறார்கள். மண்ணுலக வாழ்வு மாண்புறுத்தற்கு, வாழ்க்கையில் என்னென்ன பகுதிகள் எப்படி அமைந்திருக்கவேண்டும் என்பதைத் துர்க்கையும், அவளுடைய பரிவாரங்களும் சேர்ந்து விளக்குகிறார்கள். வாழ்வு நல்வாழ்வு ஆவதற்கு- தனிமனிதன் வாழ்விலும், சமூகத்தின் நடைமுறையிலும் ஆட்சியானது சிறப்புற்றிருக்கவேண்டும் என்பதைத் துர்க்காதேவி விளங்குகிறாள். திறம்பட அவள் செலுத்துகிற ஆணையை மீறி யாரும் செல்லமுடியாது. உயர்ந்த இராணுவ தத்துவமாக வடிவெடுத்தவள் என்று துர்க்கையை




பகரலாம்.

புலோகத்துக்கு எழுந்தருளுகின்ற துர்க்காதேவி- தத்துவ விளக்கத்திற்கும் சின்னமாகிறாள். அவள் மஹிஷாசுரமர்த்தினியாக மண்ணுலகுக்கு எழுந்தருளுகின்றாள். சிங்கத்தின் மீது நின்று கொண்டு, அவள் அவ்வசுரனை வதம் செய்கிறாள். கன்னங்கரேலென்ற நிறமுடைய அவன், நிலத்தில் நிற்கிறான். அவனுக்குச் சற்று உயரத்தில் சிம்மத்தின் மீது நின்று அம்பிகை ஆட்சிபுரிகிறாள். அவள் மஞ்சள் மேனியுடையவள். சிவப்பு வஸ்திரம் அணிந்திருக்கிறாள். ஆயுதங்கள் பலவற்றை அவள் கையாளுகிறாள். மஹிஷாசுரன் - தமோகுணத்தின் பிரதிநிதியாகிறான். துர்க்கை- ரஜோகுணத்தின் சின்னமாகிறாள். இந்த அம்பிகையின் தலைக்குமேல் சதாசிவம் தூவெண் வடிவெடுத்து, ஆழ்ந்து ஆத்ம நிஷ்டையில் இருக்கிறார். அவரது வெண்ணிறம் - சத்வ குணத்தைக் காட்டுகிறது.

அவர் தன்னில் தானாயிருப்பது, பிரபஞ்சத்திலுள்ள இருத்தியங்களையெல்லாம் கடந்து, பரத்தின் பால் செல்லுவது, நமக்கு இலட்சியம் என்பதை விளங்குகிறது.

உருவமில்லாத பரம்பொருளிடத்திலிருந்து - சத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் வடிவெடுக்கின்றன. தரையில் இருக்கும் தமோகுணத்தின்பால் போராட்டம் அதிகம். ரஜோகுணம் - தமோகுணத்தை வெல்லுகிறது. பிறகு அது செல்வமாகவும், கலைகளாகவும், நல்லறிவாகவும், பேராற்றலாகவும் வடிவெடுக்கிறது. அவைகளை நல்வழியில் பயன்படுத்தி, சத்வம் என்னும் நடுநிலையின் பால் அது செல்கிறது. பிறகு முக்குணத்துக்கும் அப்பாலுள்ள பரம்பொருளில் ஜீவனை, அந்தச் சக்தியானது கொண்டு சேர்க்கிறது. இந்த கோட்பாட்டைத் துர்க்காதேவியின் சொரூபம் விளக்குகிறது.

சக்தி எங்கும் நிறைந்தவள் என்பதை அவள் படைத்துள்ள பத்துத் கைகள் விளங்குகின்றன. எட்டுத்திக்குகளில் இருப்பவரும் அவளே, மேலும் கீழும் இருப்பவளும் அவளே என்பதை விளக்குவதற்குப் பத்துத் கரங்கள் அமைந்திருக்கின்றன. சக்திய'ன் அனுக்கிரகத்தைக் கொண்டு, ஜீவன் - வாழ்வு என்னும் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்து, பரத்தின்பால் செல்லுதல் அதன் குறிக்கோள் ஆகிறது.

பூலோகத்தில் அவதார புருஷர்களாகத் தோன்றியவர்களும், தங்களுடைய அரும்பெரும் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு முன்பு, சக்தி பூஜை பண்ணி, அவளுடைய அனுக்கிரகத்தைப் பெற்றனர். ராமபிரான் இலங்கைக்கு போகுமுன்பு, துர்க்கை பூஜை செய்ததாகவும், கண்ணபிரான் - காத்யாயினி பூஜை செய்தாகவும் சொல்லப்படுகிறது.

சங்கராச்சாரியார் - சாரதா பூஜை பண்ணி, அவளுடைய அனுக்கிரகத்தைப் பெற்றார். ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர்கூட - காளியின் வரப்பிரசாதத்தைப் பெற்றார். அந்தந்தக் காலத்துக்கு ஏற்ற முறையில், பூவுலகில் தர்மம் ஸ்தாபிக்கப்படுவதும், அகிலாண்ட நாயகியின் திருவுருவப்பாங்கின்படி நிகழ்கிறது. இவ்வாறாக, சக்தியின் உதவியை உண்மையில் நாடுபவன் வல்லவனாகிறான். அத்தகைய வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். இத்தகு பெருமைகளைத் தன்னகத்தே சேர்த்து, வேண்டுவார் வேண்டும்வகையில் வரமீய்கின்ற துர்க்கா தேவியாக, தெல்லிப்பளையில் பன்னெடுங்காலம் திருக்கோயில் கொண்டு அருளாட்சி பெற்ற ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் - சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், பற்பல அறப்பணிகளைத் துர்க்கையின் திருவருளோடு ஆற்றி வருகிறார். இன்று அன்னை துர்க்காதேவி அழகிய திருத்தேரிலே பவனி வருகிற திருக்காட்சியைத் தெல்லிப்பளையிலே காண்கிறோம். அவளின் கருணை அளப்பாரியது. எல்லோக்கும் அவளருள் இன்பம் பயக்க வேண்டும்.

*காரை.எம்.பி.அருளானந்தம்*

MADRAS CEMENTS LTD. RAMCO CEMENT
ஆசியாவில் நம்பர் 1 சீமெந்து

| | | | |
|---|---|---|---|
| SLS | - | 107 | அங்கீகாரம் பெற்றது |
| ISO | - | 8002 | தரம் பெற்றது |
| BSS | - | 12-1991 | தரத்திற்கு அமைவானது |

RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து
ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்
ஐஸ்வரபகவான் & கம்பனி
T.P. 021 - 222 - 2350
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ச.1446)



தில்லையம்பதி GREAVES
மோட்டோர்ஸ்
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாக விற்பனையாளர்கள்.
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.





இல.236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.222 2488, 021 - 2223820
AGENTS FOR - GREAVES, SPARE PARTS
(ச.1445)

விரைவாகவும் துள்ளியமாகவும் உங்கள் இல்லங்களில் இருந்து உலகெங்கும் உள்ள உங்கள் உறவினர் களுடன்
INTERNET
மூலம் தொடர்புகொள்ள இலங்கை முழுவதும் 24 மணி நேரத்தில் துரித தபால் பொதிகள் சேவை
Sri Murugan
Computer System
Communication Service & Agency post office
303. K.K.S Road, Jaffna. T.P. 021 - 222 - 2670
(ச.1444)

தரமான உருக்குத் தளபாடங்களை விரும்பிய வடிவில் தேவையான நேரத்தில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய உற்பத்தி நிறுவனம்
EQUIP UNIT TRUST (EUT)
749, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு எதிர்)
(ச.1448)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்.*

- திருக்குறள்

## நமது நோக்கு

# அரசுக்கு அழுத்தம் கொடுப்பது பேச்சில் மட்டும் இருக்கக்கூடாது

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதில் சர்வதேச சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள அக்கறை - மிக அண்மைக்காலத்தில் வெகுவாக அதிகரித்துவருவதை, அன்றாடம் தொடர்பூடகங்களில் வெளியாகிக் கொண்டிருக்கும் செய்திகள் மிகவும் அழுத்தமாகவே உணர்த்திநிற்கின்றன.

சமாதானம் தொடர்பான முயற்சிகளில் - சர்வதேச அரசுகள் காட்டிவரும் ஆர்வத்தின் அடிப்படைகள் அல்லது பின்னணி குறித்து ஆழமாக ஆராயவேண்டியதன் அவசியம் ஒருபுறமிருக்க, இதே நாடுகளில் பலவும் - கடந்த இரு தசாப்பதங்களுக்கு மேலாக இலங்கையில் தமிழ்மக்கள் பேரினவாத அரசுகளின் இன ஒடுக்கல் கொள்கைகளுக்கு எதிராக- வாழ்வுரிமை மற்றும் அரசியல் உரிமைப் போராட்டங்களை மேற்கொண்டபோது, அதனை அரசுகள் ஆயுதமுனையில் அநாகரிகமாக அடக்கியவேளையில் - அழுத்தமற்ற வகையில் சம்பிரதாயபூர்வ அதிருப்தியை மட்டும் வெளியிட்டுவிட்டு, மௌனமாக அடங்கி, அமைதிகாத்து நின்றமை - தமிழ்மக்களால் மறக்க முடியாத அனுபவமாகும்.

இத்தகைய இராணுவ ரீதியிலான இனஅழிப்பு நடவடிக்கைகளை - சிறிலங்காவை மாறிமாறி ஆண்ட அரசுகள் மேற்கொண்டதை உன்னிப்பாக கவனிப்பதாகக் கூறிக்கொண்டே, வன்மையான கண்டனங்களைத் தெரிவித்த ஒருசில நாடுகளும், இலங்கை இனப்பிரச்சினையை - தமது சொந்த அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், புவிசார் அரசியல் நலன்களை பாதுகாத்து மேம்படுத்திக்கொள்ளவும் மட்டும் பயன்படுத்தும் திட்டத்துடன் - தமிழ்மக்கள் மீதான தமது அனுதாபப் பார்வையை பரவவிட்டதன் தாக்கங்களையும் அனுபவத்தின் பின்னரே உணரக்கூடியதாக இருந்தது.

அமைதிகாப்பதாகக் கூறிக்கொண்டு- இலங்கையின் இனப்பிரச்சினைக்குள் தன்னை இணைத்துக்கொண்ட பிராந்திய வல்லாதிக்க சக்தியான இந்தியா மேற்கொண்ட சமாதானம் மற்றும் "அமைதிகாப்பு" நடவடிக்கைகள் - வெளிப்படையில் அப்போதைய ஜே.ஆர். அரசிற்கு ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துவதுபோன்ற ஒரு மாயத்தோற்றத்தை ஏற்படுத்தினாலும், சாதாரணமாக ஒரு இடைக்கால அரசாங்கத்தையே தமிழ்மக்கள் அபிலாஷைகளுக்கு ஏற்ப அமைத்து தருவதற்கு திறனற்று- விருப்பமற்ற, மற்றும் சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆர்வமற்ற ஒன்றாகவே அது செயற்பட்டது.

இதேவேளை- விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், தமிழ்மக்களுக்கு எதிராகவும் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு, எவரைப் பாதுகாக்க வந்தார்களோ, அவர்கள் மீதே அச்சுறுத்தலுடன் கூடிய அழுத்தங்களை இரண்டு வருடகாலத்துக்குப் பிரயோகித்து - ஒரு நியாயபூர்வமான போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவும் செய்தது.

இது தமிழரின் உரிமைப் போராட்ட வரலாற்றில், இரத்தக் கறைபடிந்த சில அத்தியாயங்களை தனதாக்கிக்கொண்டது.

அதன் பின்னர் மீண்டும் சிறிலங்கா அரசுகள் தமது வழமையான இராணுவ ரீதியிலான ஒடுக்குமுறைகளைத் தீவிரமாக்கின.

மீண்டும் ஒரு தசாப்தகால யுத்தம் முனைப்புற்று தீவிரம் கொண்ட காலப்பகுதியில் - இப்போது சமாதானத்தை "உயர் வேதமாக" உபதேசிக்கும் நாடுகளே சிறிலங்காவின் யுத்த நடவடிக்கைகளுக்கு - இராணுவ மற்றும் ஆயுத ரீதியிலான அனுசரணைகளையும் வழங்கி, போரியல் மூலோபாயத் திட்டங்களையும் வகுத்துக் கொடுத்தன என்பதையும் தமிழ்மக்கள் மறந்துவிடவில்லை.

ஜப்பான், அமெரிக்கா, இஸ்ரேல், அவுஸ்ரேலியா பாகிஸ்தான் என இத்தகைய பேருதவிகளை - சிறிலங்காவுக்கு பேருதவியாகச் செய்த நாடுகளின் பட்டியல் இன்னமும் நீளமானதாகும்.

இன்று இதேநாடுகள் தான் சமாதானத்தின் தலைவர்களாக தம்மை சர்வதேசரீதியில் இனங்காட்டிக் கொண்டு, சிறிலங்காவில் அமைதியை ஏற்படுத்த கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகின்றவர்களாகியுள்ளனர். இது ஒரு விசித்திரமான நிலையாகும்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய காலகட்டத்தில், தமிழ் மக்களுக்கு சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் உரிய பாதுகாப்பினையும், உரிமைகளையும் வழங்காது - பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு அனுசரணையான சட்டவிதிகளை பிரித்தாளும் பிரித்தானிய அரசியல் மூலோபாய உத்தியின் அடிப்படையில் அமைத்து, சிறுபான்மை மக்களுக்கு வரலாற்றுத் துரோகம் ஒன்றைப் புரிந்த பிரிட்டிஷ் அரசு, மிக அண்மைக் காலம் வரையும் தமிழ் மக்களுக்கு எதிரான - விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நடவடிக்கை உட்பட - பல செயற்பாடுகளை மேற்கொண்டதுடன், தமிழ்மக்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை மூர்க்கத்தனமாக மேற்கொண்டு வந்த சிறிலங்கா அரசுக்கு ஆயுத, இராணுவ ரீதியிலான உதவிகளையும் செய்துவந்ததையும் எவரும் மறக்கமாட்டார்கள்.

இப்போது இதே பிரிட்டிஷ் அரசு சமாதான நடவடிக்கைகளிலும் அக்கறைகாட்டி வருகிறது.

இதில் முக்கியவிடயம் என்னவெனில், நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்திருந்த பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் மைக்கல் அன்கிராம் அவர்கள் - இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு தனது கட்சியும், பிரிட்டிஷ் அரசும் தொடர்ந்தும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் என்று கூறியிருப்பதேயாகும்.

அவரது இந்தக் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள முக்கிய செய்தி - சமாதானத்தை உருவாக்க அழுத்தம் கொடுக்கப்படவேண்டியது சிறிலங்கா அரசாங்கத்திற்கு தான் என்பதேயாகும். இது பிரிட்டிஷ் அரசின் எதிர்க்கட்சித் தலைவரால் கூறப்பட்டிருப்பதுதான் இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது.

இந்த "அழுத்தம்" அறிக்கையில் மட்டும் இருந்துவிடக் கூடாது. செயற்பாட்டிலும் இருக்கவேண்டும்.

இலங்கை அரசு மற்றும் அதன் எதிர்க்கட்சிகளின் மீதான "சர்வதேச அழுத்தம்" மிக அழுத்தமாக கொடுக்கப்படும்போதே சமாதானம் ஓரளவுக்கேனும் சாத்தியமாகும் என நம்பமுடியும்.

அதுவும் அந்த அழுத்தம் தமிழ்மக்களின் உரிமைகள் யாவும், அவர்களின் அபிலாஷைகளுக்கேற்ப வழங்கப்படவேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாகவும் வலியுறுத்துவதாகவும் இருக்கவேண்டும். அதுவே முக்கியம்.

# யாழில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழா மக்களின் உணர்வுகளுக்கு மாறான சூழ்ச்சி முயற்சி!

## தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழு

யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள தேசிய விளையாட்டு விழா - மக்களின் உணர்வுகளுக்கு மாறான சூழ்ச்சித் திட்டம் என, தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் -

சமாதானத்திற்கான யாத்திரைகள், கோயில்களின் புனரமைப்புக்கள், இனங்களுக்கிடையிலான உறவுப்பாலங்கள், அமைதிக்கான பிரார்த்தனைகள் என நீளும் சூழ்ச்சிகரமான திட்டங்களின் பிந்திய வடிவமே - இலங்கையின் 29 ஆவது தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளாகும்.

இங்கு நாம் கவனத்தில் எடுக்கவேண்டியது - சிறிலங்கா அரசிற்கு அவசரமாக யாழ்ப்பாணத்தில் இந்தத் தேசிய விளையாட்டு விழாவை நடத்தவேண்டிய கரிசனை எதனால் ஏற்பட்டது என்பதே.

உலக ஒப்பனைக்காக சிறிலங்கா அரசு தனது வளங்கள் எல்லாவற்றையும் திரட்டி, எல்லாத்துறைகளுக்கூடாகவும், ஒரு ஊடுருவலை - எமது தாயகத்தில் நிகழ்த்துகின்றது. உண்மையான புரிந்துணர்வையோ, சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களையோ செய்யாமல், எமது மக்களை அலகுகளாகப் பிரித்து - அந்தந்தத் துறையினைத் தனித்தனியாக வகைப்படுத்தி எமது மக்களுக்கு இருக்கும் சமயம், சமூக, கலை, விளையாட்டு ஆர்வத்தை மிக லாபகரமாகப் பயன்படுத்தி - தமது இலக்கை எட்டுவதற்கு - விடுதலைக்காக எழுச்சிபெற்றிருக்கும் ஈழத் தமிழ்த்தேசியத்தை - துண்டுதுண்டாகக் கூறுபோட்டு, ஆணிவேரையே ஆட்டங்காணச் செய்வதே அரசின் நோக்கம்.

ஆகவே, நாளை உண்மையான சமாதானத்திற்கான சுமுகத் தீர்வும், பரஸ்பரம் வாழக்கூடிய சூழலும் எமது மண்ணில் ஏற்படுமானால் - அடுத்த தேசிய விளையாட்டுவிழாவை நாமே முன்னின்று சிறிலங்கா அரசுடன் இணைந்து நடத்தப் பின்நிற்கமாட்டோம்.

எனவே, இதற்கான முன்னெடுப்பை சிறிலங்கா அரசு மேற்கொள்ளுமாயின் - இத்தகைய விளையாட்டு விழாவை நடத்த இடைஞ்சலாக இருக்கமாட்டோம் என, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடக்கு - கிழக்கிலுள்ள

# பௌத்த விகாரைகளின் புனரமைப்புக்கு ஜனாதிபதி 10 கோடி ஒதுக்கவேண்டும்!

## இடைக்கால சமாதானசபை அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகளைப் புனரமைப்பு செய்வதற்கு, புனர்வாழ்வு - புனரமைப்பு அமைச்சின் மூலம், 10 கோடி ரூபா நிதி ஒதுக்கித்தருமாறு, ஜனாதிபதியிடம் இடைக்கால சமாதான சபை என்ற அமைப்பு கோரியுள்ளது.

இது சம்பந்தமான கோரிக்கையை வணக்கத்துக்குரிய மாதம்பாகம அஸ்கிரிநாயக்கவும், ஒஸ்வால்ட் பி.பேர்த் அடிகளும் கையெழுத்திட்டு - ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

யுத்தத்தில் வடக்கில் இருந்த 261 விகாரைகளும், வடக்கு-கிழக்கில் உள்ள ஏனைய 300 இக்கு மேற்பட்ட பௌத்த நிறுவனங்களையும் புனரமைப்புச் செய்வதற்கு திட்டங்கள் வகுத்துள்ளதாக, அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

இந்தப் புனரமைப்பு நடவடிக்கைகள் ஜனாதிபதிக்கு கீழ் அல்லது புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மூலம் இடம்பெறவேண்டும் என்றும், அவர்கள் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# பொ.ஐ.மு. நாடாளுமன்றில் சமர்ப்பித்த சட்டநகலை புலிகள் எதிர்க்கவில்லை!

## பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியில் இருந்தகாலத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த நகல்சட்டமூலத்தை - விடுதலைப் புலிகள் நிராகரிக்கவில்லை என்று, லங்கா சமசமாஜக்கட்சியின் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலத்தை - காலம், இடம் தராததால்தான் புலிகளுக்கு சமர்ப்பிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி சட்டமூலத்தைக் கொண்டுவந்தபோது, அதைத் தீவிரமாக எதிர்த்தவர்கள் - ஜே.வி.யும், ஐ.தே.கட்சியுமே என, அவர் மேலும் தெரிவித்தார்.

## வடமராட்சி கிழக்கில்

# மீளக்குடியமர்ந்தவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படுகிறது

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

இம்முறை சுமார் 655 குடும்பங்களுக்கு - இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை முதல் மருதங்கேணியில் உள்ள சமுர்த்தி வங்கி மூலமாக - இந்தக் கொடுப்பனவுகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வழங்கப்பட்டுவருகிறது.

# எண்ணெய் தாங்கிகளின் பாதுகாப்பு பற்றி ஆராய்வதற்கு நாடாளுமன்றைக் கூட்டுக!

## பொதுஜன ஐக்கிய முன்னணி கோரிக்கை

திருகோணமலையிலுள்ள எண்ணெய்தாங்கிகள் அமைந்திருக்கும் இடம், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம். இதையிட்டு பாதுகாப்பு வழங்குவது சம்பந்தமாக ஆராய்வதற்கு - நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி எதிர்க்கட்சி கோரியுள்ளது.

கிழக்கில் இடம்பெறும் வன்முறைகளை ஆராய்வதற்கும் நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி கோரிக்கை விடுவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்மானம் எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் எதிர்க்கட்சிகள் - மங்கள சமரவீர மூலம் சபாநாயகரிடம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் - இவ்வாறு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகிறது.

இவைகளை கருத்தில் எடுக்காவிட்டால் - நாடாளுமன்றம் இந்த மாத முடிவில் ஒத்திவைக்கப்படலாம் என்று, மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

# கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடமை நேரத்தில் அதிகாரிகள் இருப்பதில்லை

(கொழும்பு)

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகள் வருகின்ற நேரத்திலும், வெளியேறும் நேரத்திலும் போதிய அதிகாரிகள் கடமையில் இருப்பதில்லை எனவும், இதனால் பயணிகள் நீண்டநேரமாகக் காத்திருக்கவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது தொடர்பாக ஆராயப்பட்ட கூட்டத்தில் - தூதுவராலய அதிகாரிகளும், பிரயாண ஒழுங்குகளைச் செய்யும் முகவர்களும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.


உல்லாசப் பிரயாணிகளின் வருகை தற்போது அதிகரித்துள்ளமையால், இவ்வாறான சேவைகள் பாதிப்படைவது தவிர்க்க முடியாதென உள்நாட்டு அமைச்சின் செயலர் ஜுனைட் தெரிவித்தார். அத்துடன், முன்னறிவித்தலின்றி பணியாளர் கடமைக்கு சமூகமளிக்காமல் இருப்பதும், இந்தத் தாமதத்துக்குக் காரணமாகும்.

குடிவரவு, குடியகல்வு அதிகாரி மேகான் விஜேசேகரா உள்நாட்டு அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் மேற்படி விடயங்களை கண்காணிக்கப் பிரத்தியேக அமைப்பொன்றை உருவாக்குமாறு கேட்டுள்ளார்.

# உணர்வுகளை வெளிப்படுத்தும் பொங்குதமிழுக்கு என்ன தடை?

தமிழ்மக்கள் தமது உரிமைகளைப் பெற்றெடுப்பதற்காக, பல்வேறு விலைகளைக் கொடுத்துள்ளார்கள். பல்வேறு உடமைகளையும், சொத்துக்களையும், தம்முடைய உயிர்களையும், அவர்கள் உரிமைப் போராட்டத்தில் கொடுத்துள்ளனர்.

எத்தனை ஆயிரம் பேர்களின் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டு, ஒரு யுத்தம் நடந்துகொண்டிருந்த பூமி, தற்போது அமைதி வழிக்குத் திரும்புகிறது. அந்த அமைதியைத் தொடரச் செய்வதில் கிடைக்கும் பங்களிப்பைவிட,



அமைதியைக் குழப்பச் செய்வதில் இருக்கும் அக்கறையே, அதிகமாக எல்லோரிடத்திலும் காணப்படுகிறது.

யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் - அந்த யுத்தத்தை நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தைகளைச் செய்யுமாறு, யுத்தத்தில் ஈடுபட்டவர்களைப் பல்வேறு தரப்பினரும் தூண்டினார்கள். அவ்வாறு தூண்டியவர்கள் செய்த பெரு முயற்சியினால், தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, நாட்டில் இயல்பான சூழ்நிலை ஒன்று உருவாகி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும் என்ற ஆத்மார்த்தமான எண்ணங்களினால் தூண்டப் பெற்று, அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் மிகச்சிலரே எனலாம்.

யுத்தம் நடைபெறுகிறபோது, அந்த யுத்தத்தின்மூலம் கிடைக்கும் நன்மைகளால் கவரப்பட்ட ஒருசிலர் என்பதைவிடவும், இத்தகைய நோக்கங்களினால் உந்தப்பட்டவர்கள் பெரும்பான்மையானோர் என்றுதான் கூறவேண்டும். இவர்கள் யுத்தத்தை ஆதரித்து, அதனைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தமது கைகளை உயர்த்திக்கொண்டு, தமது வாயால் மட்டும் சமாதான விரும்பிகளாகக் காட்டிக் கொண்டிருந்த காலம்.

அவ்வாறான ஒரு பெரும்பான்மையினர்-யுத்த விரும்பிகளாகி, யுத்தத்தின்மூலம் நன்மைகளைப் பெற்று, யுத்தம் நடைபெற ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருந்த காலத்தில் யுத்தத்தை நிறுத்தவேண்டும், யுத்தத்தில் ஈடுபட்டவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளோடு, தமிழர் தம் உள்ளங்களில் பொங்கிய உணர்வுகளையெல்லாம் திரட்டி, பொங்குதமிழ் விழா ஒனறை நடத்தினார்கள்.

பொங்குதமிழ் விழா ஏற்பாட்டாளர்களின் நோக்கம், சமாதானம் ஒன்றேதான். சமாதானத்தின்மூலம் சகல இனங்களும் தத்தமக்குரிய உரிமைகளைப் பெற்று, வாழவேண்டுமென்ற நோக்கமே அவர்களிடம் இருந்தது.

தமிழர் தாயகத்தை வலியுறுத்தி, தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டு, நடத்தப்பட்ட பொங்குதமிழ் விழா - முதன் முதலில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில், யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் நடத்தப்பட்டது.


பொங்குதமிழ் விழாவிற்கு இருந்த ஆதரவு, அந்த நிகழ்வில் கலந்துகொண்ட மக்களின் எண்ணிக்கையை விடவும், அந்த நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும், கலந்துகொள்ள விடவில்லையே என்று, ஏங்கிய மக்களின் மனங்களின் ஏக்கங்கள் தீர்மானித்திருந்தன.

இரண்டாவது பொங்குதமிழ் நிகழ்வு, யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றபோது, அதற்கிருந்த ஆதரவு அளவிடற்கரியது. மருத்துவபீட மைதானம் நிறைந்து வழிந்திருந்தது. பொங்குதமிழ் ஒன்றில் கலந்துகொள்ளாத, கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படாத மக்கள் - இரண்டாவது பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்டனர். சமாதானத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாக இருந்த இந்தக் காலத்தில், மக்களின் பங்களிப்பு அதிகமாயிருந்தது.

பொங்குதமிழ் பிரகடனங்களை - வானமே அதிரும் படியாக இரண்டாவது பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்டோர் முழங்கினர். இதில் காணப்படுகின்ற இன்னொரு சிறப்பு என்னவென்றால் - நாட்டின் பிரதம மந்திரியின் பிரநிதிகளும் கலந்துகொண்டு, பொங்குதமிழ் நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டுச் சென்றமையைக் குறிப்பிடலாம்.

நாட்டின் பிரதம மந்திரியின் முக்கிய பிரமுகங்களோடு, சிங்களப் பேரினவாதிகளின் பிரதிநிதிகளான - பிக்குமாரும் இந்தநிகழ்விலே கலந்துகொண்டனர்.

தமிழர்கள் இவ்வாறு ஒரு பொங்கு தமிழ் நிகழ்வொன்றை நடாத்தி, தமக்கு இருக்கும் - இலங்கையில் வாழுகின்ற உரிமைகளை - சர்வதேசத்துக்குப் பறைசாற்றியுள்ளனர்.



சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் தமிழர்கள். நாடடைப் பிரிக்கும் முயற்சிகளில் தமிழர்கள் ஈடுபடுகிறார்கள். சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழர்களுக்கு நாட்டையே தாரைவார்த்துவிடுவதற்குப் பிரதமர் முயற்சி எடுக்கின்றார். என்றவாராக, பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, பொங்குதமிழ் நிகழ்விற்கு எதிராகப் பிரசாரங்கள் நடைபெறுகின்றமையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

பொங்குதமிழ் நிகழ்விற்கு எதிராக நடைபெறுகின்ற இவ்வாறான பிரசாரங்கள்- தமிழர் மத்தியிலே தோன்றியுள்ள சமாதான வாழ்வை, கனவாக்குகின்ற செயலாகவே அமைந்துள்ளன.

பொங்குதமிழ் நிகழ்வின் உண்மையான நோக்கத்தினைச் சிங்கள மக்களும் அறிந்துகொள்ளவேண்டும். நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு குடிமகனும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கோடு, பொங்குதமிழ் தொடர்பான விளக்கக்கூட்டங்கள் - நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

வவுனியா மாவட்டத்தில், பொங்குதமிழ் நிகழ்வு ஒன்றினை நடத்துவதற்கு, பொங்கு தமிழ் ஏற்பாட்டாளர்கள் முயன்று வருகின்ற ஒரு சூழ்நிலையில், அதனை நடத்தவிடாது தடுக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றமை - கவலை அளிக்கும் விடயமாகவே அமைகிறது. சமாதானம் விரைவில் தோன்றிவிடும் என்று, எண்ணுபவர்களின் மனநிலையை அது பாதிக்கும் செயலாகவே அமைந்துள்ளது.

தற்போது இருக்கும் ஒரேயொரு கேள்வி என்னவென்றால் - காலியிலிருந்து கொழும்புக்கு ஊர்வலம் நடத்தி, சமாதானத்திற்கு எதிராக ஊர்வலம் நடத்த அனுமதியளிக்க முடியுமானால், அதுவும் ஆறு நாட்கள் தொடர்ந்து ஒரு ஊர்வலத்தை நடத்த முடியுமானால், பொங்குதமிழ் என்னும் நிகழ்வை ஒருநாள் நடத்த - அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றமை எதனைக் காட்டுகிறது என்பதுதான்.

பூ.நகுலன்

---

## விழிகள் இழந்தோர்களை வரவேற்று

## வழிகள் பல காட்டும் வாழ்வகம்

வாழ்க்கையில் - விழிப்புலன் இழந்து, வாழத்தவிக்கும் உள்ளங்களுக்கு - வலதுகரம்போல சகல உதவிகளையும் வழங்கி, மீண்டும் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் உடுவில் வாழ்வகம் - தனது 15 ஆவது நிறைவு நாளை அண்




மையில் வெகுவிமர்சையாகக் கொண்டாடியது.

சுன்னாகத்திலிருந்து தெற்கே சுமார் 3 கிலோமீற்றர் தூரத்தில் - உடுவில் சபாபதி வீதியில், தனக்கெனவொரு மிடுக்குடன் அமைந்து, செயற்படும் இந்த இல்லம்- விழிகளை இழந்தவர்களுக்கு வழிகள் பல காட்டும் தொண்டு நிறுவனமாகும்.

1972 ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்ட கல்வித்திட்டத்தின் கீழ், செயற்பட ஆரம்பித்து, சிறிது சிறிதாக முளைவிடத் தொடங்கிய பார்வையற்றோர்களுக்கான செயற்பாடுகள் - 1988 ஆம் ஆண்டில் பல பெரியோரின் முயற்சியின் பலனாகத் தெல்லிப்பளைக் கிராமத்தில் - செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியினால் 'வாழ்கம்' என்ற பெயரில் திறந்துவைக்கப்பட்டது. அன்றுதொட்டு இன்றுவரை எத்தனையோ பல இடர்களைக் கண்டும், சற்றும் மனம்தளராது, உறுதியுடன் நிமிர்ந்து நின்று சேவை புரிகிறதென்றால், அது மிகையாகாது.

தமிழ் மக்களின் எதிரியாகிய - போர்வெறியின் தாக்கத்தால், தெல்லிப்பளையிலிருந்து இடம்மாறி, நீண்ட இடைவெளிக்குப் பின், 1993 ஆம் ஆண்டு தொடக்கம், உடுவில் ஞானப்பிரகாசர் வீதியிலுள்ள ஒரு தனியார் வீட்டில் தற்காலிகமாக அமைந்து, சிறப்பாகத் தனது பணிகளை மேற்கொண்ட வாழ்வகம் - 1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் அரக்கனின் பாரிய இடப்பெயர்வில் அகப்பட்டு, இந்த இடத்தையும்விட்டு, சகல பொருட்களையும் அப்படியே விட்டு, மிகநீண்டதூரம் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

மீண்டும் 1997 ஆண்டில் மக்கள் மீளக்குடியமர்ந்த காலத்தில், மானிப்பாய் ஸ்ரீ சத்தியசாயி சமித்தியின் ஆதரவுடனும், நிர்வாகசபை உறுபினரின் அயராத உழைப்பினாலும், நிலையப் பொறுப்பாளர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் அரவணைத்த செயற்பாட்டினாலும்- 19.01.1998 ஆம் ஆண்டுமுதல் மானிப்பாயில் தனது சேவையை மீண்டும் ஆரம்பித்தது.

இவ்வாறாக ஒரு தசாப்த காலம் அங்குமிங்குமாக அல்லலுற்ற வாழ்வகத்திற்கு - ஆறுதிருமுருகனின் அயராத உழைப்பினால், இலண்டன் மாநகரிலுள்ள தமிழர் அநாதைகள் அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் தெய்வேந்திம்மூலம், உடுவில் சபாபதி வீதியில் - 32 1/2 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு, 16.12.1999 இல் புதிய கட்டடத்திற்கான அத்திவாரக்கல் - திருமுருகனால் நாட்டிவைக்கப்பட்டது. RRAN அமைப்பின் உதவினால், கட்டடங்கள் கட்டிமுடிக்கப்பட்டு, 09.03.2002 இல் குடிபுகுதல் விழா சிறப்பாக இடம் பெற்றது.

15 ஆண் பிள்ளைகளும், 17 பெண் பிள்ளைகளுமாக மொத்தம் 32 விழிப்புலன் இழந்த மாணவர்கள் இங்கு இன, மத வேறுபாடுகள் இன்றி- அனைவரும் ஒரு தாய் மக்களாக, ஒன்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் கல்வியிலும், கலைத்துறையிலும், போட்டிகளிலும் அதிக நாட்டமுள்ளவர்களாக உள்ளனர். இதனால், பல போட்டிகளிலும் பங்குபற்றி, வெற்றியீட்டியது மட்டுமல்லாது, தங்கப்பதங்கள், வெற்றிச் சான்றிதழ் என்பனவற்றையும் பெற்றுள்ளனர். அத்துடன், பல்கலைக்கழகம் சென்றும், சட்டக் கல்லூரிக்குச் சென்றும் - சட்டம் பயிலவும் வாழ்வகம் மிகவும் உறுதுணையாகவுள்ளது.

இவர்களின் கல்வி வளர்ச்சியில்- தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும், மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியும் அளப்பரிய சேவைகள் புரிகின்றன. விசேட பயிற்சி பெற்ற ஆசிரியைகளாகச் செல்விகள், சி. விஜயதேசி, ப.உருத்திரதேவி, இ.நந்தினிதேவி, பா.கிருஷ்ணானந்தனி ஆகியோர் - அறிவூட்டலில் தன்னிகரற்ற வேவையை வழங்குகின்றனர். மு.ஜெயகௌரி, கிருபா அனந்தகோபன் ஆகியோர் முறையே சங்கீதம், மிரு தங்கம் என்பவற்றைப் பயிற்றுவிக் கின்றனர். இவர்களின் இசைத்துறை நுட்பத்தினால், பல மாணவர்கள் இசைப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளனர். அவர்களுள் கு.ஜெகதீசன் - 10 தங்கப்பதங்கங்களைப் பெற்றதுடன், இந்துக் கலாசார அமைச்சினால் - கொழும்பு காலி முகத்திடலில் நடாத்தப்பட்ட இந்து மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து இசைமழைபொழிந்து, அனைவரது பாராட்டையும் பெற்றுக்கொண்டார். இந்த நாட்டில் மட்டுமல்லாது, இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கா அம்மன் ஆலய மஹோற்சவத்தில் இன்னிசை நிகழ்த்த செல்லவுள்ளார்.

கண்களை இழந்தாலும், நாம் கல்வியை இழக்கமாட்டோம் என, இந்த மாணவர்கள் கூறுவது முற்றிலும் உண்மை. ஏனெனில், இங்கே கல்வி அறிவு பெற்ற க.நகுலாம்பிகை - கலைச்சமூகவியல் 3 ஆம் வருட மாணவியாகவும், க.தர்மசேகரன் உளவியல் 3 ஆம் வருடத்திலும், து.யசிந்தன் கலை 2 ஆம் வருடத்திலும் - யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பைத் தொடர்கின்றனர். அல்போன்ஸ் ஸ்னிஸ் அற்புதராஜா 1 ஆம் வருட




சட்டக்கல்லூரி மாணவனாகக் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது மேற்படிப்பைத் தொடர்கிறார்.

சைவ முன்னேற்றச்சங்கம், இந்துக் கலாசார அமைச்சு, யுனிசெப், இந்திரன் காரளசிங்கம், டொக்டர் என்.இரஞ்சிதன், இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கா அறக்கட்டளை நிதியம், தயாநகைப் பூங்கா, K.பாலகிருஷ்ணன், சமூகநல அமைச்சு போன்றவர்களின் தாராளக்கொடை அர்ப்பணிப்பினால், தொடர்ந்தும் சேவைபுரிய திடசங்கற்பம் பூண்டுள்ள வாழ்வகம் - சமூகத்தில் பலவிதத்திலும், பார்வை இழந்து பரிதவிக்கும் எவரையும் அரவணைத்து, ஆதரவு நல்க அன்புக்கரம் நீட்டி வரவேற்று நிற்கின்றது.

சி.சந்தனகுமார்

# பலஸ்தீனப் பிரதமர் அபாஸ் பதவி விலகுவதாக அறிவிப்பு!

பலஸ்தீனப் பிரதமர் மொகமட் அபாஸ், தனது பதவி விலகலை யசீர் அரபாத்திடம் கையளித்துள்ளார்.

சில வாரங்களாக இருவரிடையேயும் பதவிப்போட்டி வலுப்பெற்றிருந்தது. பிரதமரின் பதவி விலகலை அரபாத் பரிசீலனை செய்துவருவதாக பலஸ்தீன அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அபாஸின் பதவி விலகலை அரபாத் ஏற்றுக்கொண்டால், இஸ்ரேலும் அமெரிக்காவும் அரபாத்தைத் தனிமைப்படுத்தி விடுவார்கள் என, பி.பி.சி. செய்தியாளர் ரிச்சாட் மிரோன் ஜெருசலத்தில் தெரிவித்தார்.

பலஸ்தீனத்தின் அதிகாரங்கள் மீண்டும் அரபாத்திடம் செல்வதை தான் விரும்பவில்லை என இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரவித்தார்.


அபாஸின் பதவி விலகலை அறிந்ததும், பலஸ்தீனத்தில் ஏற்படவுள்ள உறுதியற்ற நிலை தொடர்பான தனது கருத்துக்களை ஐரோப்பிய கூட்டமைப்பு வெளியிட்டது.

இஸ்லாமிய தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய அதிகாரங்களை பிரதமர் அபாஸிடம் வழங்க அரபாத் விரும்பவில்லை. இதனால் தனது பதவி விலகல் மூலம் சர்வதேச அழுத்தங்களுக்கு அரபாத் முகம் கொடுக்க நேரிடலாம் எனவும், அதன்மூலம், கூடிய அதிகாரங்களுடன் தன்னையோ அல்லது வேறொரு பிரதம மந்திரியையோ மீண்டும்



நியமிக்கலாம் என்ற கருத்தை அபாஸ் கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## செய்தியாளர் கைது!



அராபிய செய்திச் சேவையான அல் யசீராவின் ஸ்பெயின் நாட்டிற்கான செய்தியாளர் ரைசீர் அலோனி அல்-கொய்டா இயக்கத்துடன் தொடர்பிருப்பதான சந்தேகத்தின் பேரில் அந்த நாட்டின் தென்பகுதி நகரான 'இரடனாவில்' வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

உலகவலம்

## ஈராக்கிற்கு கூடுதல் படை; பிரிட்டன் அரசு தீர்மானம்!

ஈராக்கில் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளுக்கெதிரான வன்முறைகள் தொடர்வதால், கூடுதலான படைகளை அங்கு அனுப்புவதற்கு பிரிட்டன் தீர்மானித்துள்ளது.

அடுத்த வாரமளவில், அங்கு அனுப்பப்படவுள்ள படையினரின் எண்ணிக்கையை வெளிப்படுத்தவுள்ளதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் 'கொப் கூன்' தெரிவித்தார்.

கூடுதலான படையினர் ஈராக்கிற்கு அனுப்பப்படுவதை லிபரல் ஜனநாயகக கட்சியின் பாதுகாப்புப் பேச்சாளர் வரவேற்றுள்ளார்.

ஆனால், கூடுதலான படைகளை அங்கு அனுப்புவது வெற்றியைத் தருமெனத் தான் கருதவில்லை எனவும், ஐக்கிய நாடு பாதுகாப்புச் சபையாலேயே ஈராக்கின் இறைமை



யையும், கட்டுப்பாட்டையும் மீட்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஈராக்கில் நிலைமையைச் சீர் செய்வதற்குத் 10,000 சர்வதேசப் படையினர் தேவைப்படுவதாக அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் அறிவித்துள்ளார்.

# காஷ்மீரில் குண்டுத் தாக்குதல்; அறுவர் பலி; 30 பேர்வரை காயம்!



இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் ஒன்றில் 6 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 30 பேர் காயமடைந்தனர்.

ஸ்ரீநகரில் உள்ள பழக்கடைத் தொகுதியொன்றில் இந்தியப் படையினரின் தொடர் அணியொன்று சென்று கொண்டிருந்தபோதே இந்தக் குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது.

குண்டுத் தாக்குதலின்போது இருவரின் உடல்கள் தூக்கியெறியப்பட்டதாக இந்தியப் படையதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், குண்டுத் தாக்குதலிலிருந்து படைத் தொடரணி தப்பிவிட்டதாகவும், ஒரு படையதிகாரியே சிறிய காயங்களுக்கு உள்ளானதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

காஷ்மீரில், கடந்த 10 நாட்களாகத் தொடரும் வன்முறைகளில் - பொதுமக்கள், தீவிரவாதிகள், இராணுவத்தினர் என 90 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டு டெல்கி நாடாளுமன்றம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சம்பந்தபட்ட 'ஜெஷ்-இ-மொஹமட் குழுவைச் சேர்ந்த காசி பாபா, அண்மையில் இந்தியப் படையினரின் தாக்குதலில் இப்பகுதியில் கொல்லப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# அல் - கொய்டா தீவிரவாதிகள் நால்வரை அமெரிக்க புலனாய்வுத்துறை தேடுகிறது!





(வோஷிங்டன்)

அமெரிக்கா மீது, மீண்டும் தாக்குதல் ஒன்றிற்கு திட்டமிட்டுவருவதாகக் கருதப்படும் நான்கு அல்-கொய்டா தீவரவாதிகளை, தேடிவருவதாக அறிவித்துள்ள அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர்,

அவர்களின் படங்களை கணினி வலைப் பின்னலூடாக பிரசுரித்துள்ளது.

பாரிய தாக்குதல்கள் நடத்தப்படாவிட்டாலும் செப்ரெம்பர் 11 இல், தமது 2 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாட எத்தனிக்கலாம் என புலனாய்வுத்துறை அதிகாரி ரொபாட் முஏலர் தெரிவித்தார்.

உள்நாட்டில் தாக்குதல்களை தவிர்த்து தமது தந்திரோபாயங்களை அமெரிக்காவிற்கு வெளியில் நடத்த முற்படலாம் எனத் தெரிவித்த அவர், குறிப்பாக விமானக்கடத்தல்களையோ காார் குண்டுத் தாக்குதல்களையோ மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நடாத்தும்

பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

*உயர்தரப் பிரிவு* - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

*தலைப்பு* - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

*கீழ்ப் பிரிவு* - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

*தலைப்பு* - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

நிபந்தனைகள்

✧ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
✧ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
✧ கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
✧ கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியானது.
✧ கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

போட்டி முடிவுதிகதி - 10.09.2003

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்
சிறுகதை; கவிதைப் போட்டிகள்

சிறுகதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
முன்றாவது பரிசு - 2,000 ரூபா

கவிதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
முன்றாவது பரிசு - 2,000 ரூபா

நிபந்தனைகள்

✧ எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
✧ மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
✧ கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால் எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
✧ கதைகள், கவிதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
✧ ஆக்கங்கள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
✧ நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
✧ பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதான முன்னெடுப்புக்கள் பற்றி சிங்கள மக்களுக்குத் தெரியாது!

## தமிழ் காங்கிரஸ் உதவித்தலைவர் குமரகுருபரன் தெரிவிப்பு

(வவுனியா)

தற்போதைய அரசு, சமாதான முயற்சிகள் பற்றிய தெளிவான நிலையை - அடிமட்டச் சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தத் தவறிவிட்டது. இவ்வாறு தெரிவித்துள்ளார் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உதவித் தலைவர் குமரகுருபரன்.

வவுனியாவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

தற்போதைய அரசு, புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றியும், சமாதான நடவடிக்கைகள் பற்றியும் - தெளிவான சிந்தனையை அடிமட்டச் சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தத் தவறிவிட்டது. இதனால், அவர்கள் உண்மை நிலையைப் புரியாதுள்ளார்கள். இவர்களது அறியாமையை, சமாதான விரோத சக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றன. இதன் மூலமாகத்தான் ஜே.வி.பி. சிஹல உறுமய போன்ற இனவாத கட்சிகள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்துகின்றன.

எனவே - தற்போதைய அரசு, அடிமட்டச் சிங்கள மக்கள் மத்தியில் சமாதானம் பற்றிய தெளிவான நிலைப்பாட்டை ஏற்படுத்த முயலவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# நாயன்மார்கட்டில் வெடிக்காத நிலையில் நூற்றுக்கும் அதிகமான ஷெல்கள் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நாயன்மார்கட்டில், பதுங்குகுழி ஒன்றிலிருந்து வெடிக்காத நிலையில் நூற்றுக்கு மேற்பட்ட ஷெல்கள், கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்டன.

நாயன்மார்கட்டு பகுதியிலுள்ள வீட்டிலிருந்து இராணுவத்தினர் முகாம் அமைத்திருந்து வெளியேறிய பின்னர், மீளக்குடியமர்வதற்காக துப்புரவு செய்துகொண்டிருந்தவேளை - வெடிபொருள் ஒன்று காணப்பட்டது.

இதனையடுத்து, வீட்டு உரிமையாளர் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியடுத்து, அவர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது தூர்ந்த நிலையிலிருந்த பழைய பதுங்குகுழியினை அகழ்ந்தபோதே, வெடிக்காதநிலையில் 122 ஷெல்கள் மீட்கப்பட்டன. அவற்றில் அகற்ற முடியாத 9 ஷெல்கள் பதுங்குகுழியில் வைத்தே செயலிழக்கச்செய்யப்பட்டன. (111)

# நெல்லியடியில் கொமர்ஷல் வங்கி திறப்புவிழா

(நவிண்டில்)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதி, இல.333இல் அமைந்துள்ள பொன்னையா கட்டடத்தில், கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளை எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.45 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில், கொமர்ஷல் வங்கியின் தலைவர் எம்.ஜே.சி. அமரசூரியா கலந்து கொள்ளவுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (116)

# யாழ். கல்வி வலயத்தில் கணிப்பீடு தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம்!

(யாழ்ப்பதண

பாடசாலை மட்ட கணிப்பீடு தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று, நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்திற்கு பாடசாலை அதிபர்களையும் பாடசாலைகளில் கணிப்பீட்டிற்கு பொறுப்பான ஆசிரியர் ஒருவரையும், தவறாதுகலந்து கொள்ளுமாறு, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார்.

நாளைமறுதினம் இந்த வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான ஆங்கில பரீட்சை நடைபெறவுள்ளதனால், அதற்குரிய வினாத்தாள்களை இன்று நடைபெறவுள்ள கூட்டத்திலேயே பாடசாலை அதிபர்கள் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (ச)

# புலிகளோடு பேச்சு நடத்துவதற்கு; கண்காணிப்புக் குழு விருப்பமாம்!

குரங்குப்பாஞ்சான் குள முகாம் தொடர்பாக, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனோடு - வன்னியில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விரும்புவதாக, இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதற்கான நேரத்தைத் தாங்கள் புலிகளிடம் கோரியிருப்பதாகவும், அடுத்த வாரமளவில் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உட்பட உயர் மட்டக் குழுவினரே, பேச்சுவார்த்தைக்காக வன்னிக்குச் செல்வார் எனவும் அவர் தெரிவித்தார்.

# அடிப்படை உரிமையை மீறியதாக பொலிஸாருக்கு எதிராக வழக்கு!

## நெல்லியடிச் சேர்ந்த மூவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்

ஈ.பி.டி.பியினருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின்போது, பொலிஸார் தம்மைத் தாக்கியதன் மூலம், அடிப்படை மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாகத் தெரிவித்து, உயர்நீதிமன்றில் மூவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கை, நெல்லியடி பிரதேசத்தைச் சேர்ந்த மூவர் தாக்கல் செய்துள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் நெல்லியடியில் நடைபெற்ற ஈ.பி.டி.பியினருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின்போது, பத்திரிகையாளர்கள் உட்பட பலர் தாக்கப்பட்டமை தெரிந்ததே. இச்சம்பவத்தில் காயமடைந்த மூவரே, இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம், இந்த வழக்கு உயர்நீதிமன்ற நீதிபதியால் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின்போது, சம்பந்தப்பட்ட மூவரினதும் சம்பவம் நடைபெற்ற போதான வைத்தியசாலை வைத்திய அறிக்கையை, ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதிக்கு சமர்ப்பிக்கும்படி, சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைதியான வழியிலே போராடிய எம்மீது, பொலிஸார் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதன் மூலம் - மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாக தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மடு பாதையை திறந்துவிடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

மடுப் பாதையை போக்குவரத்துக்காக திறந்துவிடுவதற்கு, பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில், எவ்வகையான வாகனங்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படுவது என்பது பற்றி தீர்மானிக்கப்பட்டது.

துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்கள், மூன்று சில்லு வாகனம், இரண்டு சில்லு உழவு இயந்திரம், வான் போன்றவற்றை போக்குவரத்துக்குப் பாவிக்கலாம் என்று, தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை, வாகனங்கள் பாவிப்பதற்கு இன்னும் அனுமதியில்லை. ஆனால், பயணிகள் அந்தப் பாதையைப் பாவிக்கும்போது, அடையாளத்தை உறுதிப்படுத்தவேண்டும் என்று ஒரு நிபந்தனையாக முன்வைக்கப்பட்டுள்ளது. இராணுவத்தின் அனுமதி கிடைத்தவுடன், இந்தப் பாதை மிக விரைவில் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சிறுவர் உரிமை மதிக்கப்படும்போதே நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும்

## யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவிப்பு



சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்படும்போதே நாட்டில் நிலையான சமாதானம் ஏற்படும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

நேற்று யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்ற இலங்கைக்கான கத்தோலிக்க திருச்சபையின் நீதிக்கும், சமாதானத்துக்குமான குழு நடத்திய நாடகப் போட்டியில் பிரதம விருந்திராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

செடெக் நிறுவனத்தின் சமாதான இணைப்பாளர் தெய்வேந்திரராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், முன்னதாக வரவேற்புரையை கியுடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு ஜெயக்குமார் அடிகளார் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஆயர், தற்போது எமது நாடு சமாதானத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறது. நீடித்த நிலையான சமாதானத்தை நாம் எல்லோரும் விரும்பி நிற்கின்றோம். சமாதானம் நீடிக்கவேண்டுமாக இருந்தால் சிறுவர் உரிமைகள் மதிக்கப்படவேண்டும்.

இன்று அவர்கள் நாடகங்கள் மூலமாக எமக்குப்பல பிரதிபலிப்புக்களைத் தந்துவிட்டுச் சென்றுள்ளனர். எமது சமுதாயம் அவர்களுக்கு செய்யவேண்டியவை நிறையவே உள்ளன. இந்த யதார்த்தத்தை அவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள்.

நாம் எமது கடமையை சரிவரச் செய்யவேண்டும் எனவும், அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் - செடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு டேமியன் பெர்னாண்டோவும் உரையாற்றினர். அவர் தமது உரையிலே - சமூகம் இன்று சிறுவர்கள் மீது பிரயோகிக்கும் எதிர்மறையான விளைவுகளை நிறுத்தவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை சிங்கள மொழிமூலமான நாடகப் போட்டிகள், எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் எங்கள் சிறுவர்களை நாம் 'பாதுகாப்போம் பராமரிப்போம்' எனும் வாசகம் அடங்கிய முத்திரை பொறித்த கடிதவுறை வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### சைவ அறிவுப்போட்டி

சைவநெறி பொதுஅறிவுப்போட்டி புதன்கிழமை காலை 9 மணிக்கு- சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் நடைபெறுமென, தென்மராட்சி வலய கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### வீதி விபத்தில்...

சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை அருகாக வந்த லொறிமோதி விபத்துக்குள்ளானதில் இவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

### வாய்த் தகராறு...

இருவரும் தம்மோடு வைத்திருந்த கத்திகளோடு கட்டிப்புரண்டு சண்டையிட்டதாகவும், இதன்போது ஏற்பட்ட கத்திக்குத்தில் பொன்னையா தங்கராஜா (வயது 28) என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தமிழ்நாட்டிலுள்ள...

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது, திருகோணமலை மாவட்டத்தில் இருந்து அகதிகளைக் கொண்டுசென்று, மீன்பிடிப்படகுகளே இன்று திருகோணமலைக்கு எடுத்துவரவுள்ளன.

இந்த 61 படகுகளையும், இந்திய கடற்படையினர், இலங்கைக் கடற்பரப்பில் வைத்து கையளிக்கவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்கு நிலைவரம் தொடர்பாக சந்திரிகாவுக்கு இரகசிய அறிக்கை

## திவயின பத்திரிகை தகவல்

அரசாங்கத்துக்குத் தெரியாமல், கிழக்கு மாகாண நிலவரம் பற்றி, கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் வசந்த கரன்னாகொட - ஒரு இரகசிய அறிக்கையை ஜனாதிபதியுக்கு அனுப்பி வைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

24 மணி நேரத்தில் கிழக்கைப் புலிகள் பிடிப்பதற்குரிய பலத்தை அடைந்திருக்கிறார்கள் என்று, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, 'கரன்னாகொட எனக்குத் தெரியாமல் எப்படி இந்த அறிக்கையை ஜனாதிபிக்கு அனுப்பி வைத்தார்' என்று கேட்டதாக 'திவயின' பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திரைப்படக் காட்சி

கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் திரைப்பட வட்டத்தினால், கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் அம்ஷன்குமார் இயக்கிய 'சுப்பிரமணிய பாரதியார்' என்ற திரைப்படம் கடந்த சனிக்கிழமை காண்பிக்கப்பட்டது.

திரைப்பட ஆர்வலர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பொ.ஐ.முவுடன் கூட்டணி...

புலிகள் நிராகரித்துள்ளதால், தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துவரும் அதிகாரப் பகிர்வு என்ற யோசனை செல்லுபடியற்றதாகின்றது எனக் கூறியுள்ளது.

விடுதலைப் புலிகளின் இணக்கப்பாட்டை சிறிலங்கா சுதந்திரக் கட்சி பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முன்வைததுள்ள யோசனையிலும் பார்க்க, சிறந்த யோசனை ஒன்றை முன்வைக்கவேண்டும்.

பிரச்சினைக்குத் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எடுத்துவரும் தீர்வு முயற்சிகள், நாட்டைப் பிரிவினைக்கு இட்டுச்செல்லும்.

சர்வதேசத்தின் அழுத்தத்துக்கு அஞ்சியே, அதிகாரப் பகிர்வு யோசனையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரித்து வருகின்றது. ஆனால், சுதந்திரக் கட்சியின் இந்த நிலைப்பாடு யுத்தத்திலும் பார்க்க மோசமான ஒரு நிலைக்கு நாட்டை இட்டுச் சென்றுவிடும் என்பதால், இந்த நிலைப்பாட்டை கைவிடவேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிப்பவர்கள், அதிகாரப் பகிர்வு யோசனையை கைவிடுமாறு தங்கள் தலைவர்களைக் கோரவேண்டும் எனக் கோரியுள்ள ஜே.வி.பி.,

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு, சர்வதேச சமூகத்திடமிருந்து ஆதரவையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலையில் இலங்கை உள்ளது.

எமது கட்சியின் ஆற்றலையும், அதன் பெறுமதியையும் சுதந்திரக் கட்சியின் தலைமைப்பீடம் சரிவர மதிப்பிடவில்லை என்று தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.